ஞானி புருஷ் தாதா பகவான் அவர்களால் விவரிக்கப்பட்ட

# பிறருக்கு உதவி செய்வதற்கான சரியான புரிதல்



உங்களுடைய ‘கனிகளை’ நீங்கள் மற்றவர்களுக்கு அளிக்கும்போது,
இயற்கை உங்களை கவனித்துக் கொள்ளும்.

Tamil

ஞானி புருஷ் தாதா பகவான் அவர்களால் விவரிக்கப்பட்ட

# பிறருக்கு உதவி செய்வதற்கான சரியான புரிதல்

நிரூபென் அவர்களால் தொகுக்கப்பட்டது மற்றும்
பின்பற்றுபவர்களால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.

**பதிப்பாளர்** : **திரு. அஜீத்.சி.படேல்**
**தாதா பகவான் விஞ்ஞான் பௌண்டேஷன்**
1, வருண் அபார்ட்மெண்ட், 37 ஸ்ரீமாலி சொசைடி,
நவ்ரங்பூரா காவல் நிலையம் அருகில்,
நவ்ரங்பூரா, அஹமதாபாத் – 380009.
குஜராத், இந்தியா.
தொலைபேசி: +91 79 3500 2100

© **தாதா பகவான் பௌண்டேஷன்**
5, மம்தாபார்க் சொசைட்டி
பி/எச், நவ்குஜராத் கல்லூரி,
உஸ்மான்பூரா, அஹமதாபாத் – 380014
குஜராத், இந்தியா.
ஈமெயில் : info@dadabhagwan.org
தொலைபேசி : +91 70 3500 2100

All Rights Reserved. No part of this publication may be shared, copied, translated or reproduced in any form (including electronic storage or audio recording) without written permission from the holder of the copyright. This publication is licensed for your personal use only.

**உள்நோக்க மதிப்பு** : மிகுந்த பணிவு மற்றும்
“நான் யாதொன்றும் அறியேன்”
என்ற விழிப்புணர்வு

**Price** : ₹ 45

**First Edition** : June 2024 (500 copies)

**பிரிண்டர்** : **அம்பா மல்டிபிரிண்ட்,**
பி-99, எலக்ட்ரானிக்ஸ், ஜி.ஐ.டி.சி.,
கே-6 ரோடு, செக்டார் - 25,
காந்திநகர் – 382044.
தொலைபேசி: +91 79 3500 2142

**ISBN/eISBN** : 978-93-91375-92-8

**Printed in India**

# த்ரிமந்திரம்








**நமோ வீதராகாய**
**நமோ அரிஹந்தானம்**
**நமோ சித்தானம்**
**நமோ ஆயரியானம்**
**நமோ உவஜ்ஜாயானம்**
**நமோ லோயே சவ்வ சாஹுனம்**
**ஏசோ பஞ்ச நமுக்காரோ**
**சவ்வ பாவப்பனாசணோ**
**மங்களானம் ச்ச சவ்வேசிம்**
**பதமம் ஹவயி மங்களம்**
**ஓம் நமோ பகவதே வாசுதேவாய**
**ஓம் நம சிவாய**
**ஜெய் சச்சிதானந்தம்**



## தமிழில் தாதா பகவானின் புத்தகங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆத்ம அனுபவம் | 6. | கோபம் |
| 2. | அட்ஜெஸ்ட் எவ்ரிவேர் | 7. | கவலைகள் |
| 3. | மோதல்களை தவிர்க்கவும் | 8. | மரணம் |
| 4. | நான் யார்? | 9. | அனைத்து மதங்களின் சாராம்சம் |
| 5. | மனிதநேயத்தின் நடைமுறை | 10. | பிறருக்கு உதவி செய்வதற்கான சரியான புரிதல் |

## Books of Dada Bhagwan in English

| | | | |
|---|---|---|---|
| 1. | Adjust Everywhere | 19. | Money |
| 2. | Ahimsa: Non-Violence | 20. | Noble Use of Money |
| 3. | Anger | 21. | Pratikraman |
| 4. | Aptavani-1 | 22. | Pure Love |
| 5. | Aptavani-2 | 23. | Right Understanding to Help Others |
| 6. | Aptavani-4 | 24. | Science of Karma |
| 7. | Aptavani-5 | 25. | Science of Speech |
| 8. | Aptavani-6 | 26. | Shree Simandhar Swami : The Current Living Tirthankar |
| 9. | Aptavani-8 | 27. | Simple & Effective Science of Self-Realization |
| 10. | Aptavani-9 | 28. | The Essence Of All Religion |
| 11. | Autobiography of Gnani Purush A.M Patel | 29. | The Fault Is Of The Sufferer |
| 12. | Avoid Clashes | 30. | The Guru and The Disciple |
| 13. | Brahmacharya: Celibacy Attained with Understanding | 31. | The Hidden Meaning Of |
| 14. | Death: Before, During & After… | 32. | The Practice Of Humanity |
| 15. | Flawless Vision | 33. | Trimantra |
| 16. | Generation Gap | 34. | Whatever Happened is Justice |
| 17. | Harmony in Marriage | 35. | Who Am I? |
| 18. | Life Without Conflict | 36. | Worries |

❖ Dada Bhagwan books are available in different languages: Gujarati, Hindi, English, Marathi, Telugu, Kannada, Oriya, Malayalam, Bengali, Punjabi, Assamese, Tamil, German, Spanish, Russian, etc.

❖ 'Dadavani' Magazine is published every month in three languages: Gujarati, Hindi & English.

❖ All books, magazines are also available on Dada Bhagwan online Store, visit on: https://store.dadabhagwan.org/

# தாதா பகவான் என்பவர் யார்?

ஜூன் 1958, சுமார் மாலை ஆறு மணிக்கு, சூரத் ரயில் நிலையத்தில், சலசலப்புக்கு மத்தியில் ஒரு பெஞ்சில் அம்பாலால் முல்ஜூபாய் பட்டேல் அமர்ந்திருந்தார். அப்போது தாதா பகவான், அம்பாலால் அவர்களின் புனிதமான உடலுக்குள் முழுமையாக வெளிபட்டார். ஆன்மீகத்தின் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வை இயற்கை வெளிப்படுத்தியது! ஒரு மணி நேரத்திற்குள் பிரபஞ்சத்தின் தரிசனம் அவருக்கு வெளிபடுத்தப்பட்டது! நாம் யார்? கடவுள் என்பவர் யார்? உலகை இயக்குபவர் யார்? கர்மா என்றால் என்ன? மோட்சம் என்றால் என்ன? போன்ற அனைத்து ஆன்மீக கேள்விகளுக்கு முழுமையான தெளிவு கிடைத்தது.

அன்று மாலையில் அவர் அடைந்த ஞானத்தை, தனது பிரத்தியேக விஞ்ஞான ஆய்வு முறை *(ஞானவிதி)* மூலம் மற்றவர்களுக்கு இரண்டே மணி நேரத்தில் ஞானம் வழங்கினார். இதை அக்ரம் பாதை என்று குறிப்பிடப்படுகிறது. *க்ரம்* என்றால் ஒன்றின் பின் ஒன்றாக மேலே ஏறுவது அதாவது படிப்படியாக ஏறுவது, ஆனால் *அக்ரம்* என்றால் படி இல்லாத எளிதான, லிப்ட் பாதை.

தாதா பகவான் யார் என்பதை அவர் மற்றவர்களுக்கு விளக்கி கூறுவது என்னவென்றால், உங்கள் முன்னால் தெரிபவர் தாதா பகவான் அல்ல, நான் *ஞானி புருஷ்*, என்னுள் “பதினான்கு உலகங்களுக்கும் அதிபதியான தாதா பகவான் வெளிப்பட்டு இருக்கிறார்”. அவர் உங்களின் உள்ளும் உள்ளார். அனைவரின் உள்ளும் உள்ளார். ஆனால் அவர் உங்களினுள் வெளிப்படாமல் இருக்கிறார். இங்கு (ஏ.எம்.பட்டேல் அவர்களின் உள்) முழுமையாக வெளிப்பட்டு இருக்கிறார். நான் இறைவன் *(பகவான்)* அல்ல. என்னுள் வெளிபட்டிருக்கும் தாதா பகவான் அவர்களை நானும் தலை வணங்குகிறேன்.

❖ ❖ ❖ ❖ ❖

# ஆத்ம ஞானம் அடைவதற்கான தற்போதைய தொடர்பு

1958 ஆம் ஆண்டு ஆத்ம அனுபவம் பெற்ற பிறகு, மதிப்பிற்குரிய தாதாஸ்ரீ, ஆன்மீகத்தை தேடுபவர்களுக்கு, ஆன்மீக சொற்பொழிவுகள் மற்றும் ஆத்ம ஞானம் வழங்குவதற்காக தேசிய மற்றும் சர்வ தேச அளவில் பயணம் செய்தார்.

தாதாஸ்ரீ தான் வாழ்ந்து கொண்டிருக்கும்போதே, டாக்டர் பூஜ்ய நிருபென் அமீன் அவர்களுக்கு, ஆத்ம ஞானம் மற்றவர்களுக்கு வழங்குவதற்கான ஆன்மீக சக்தியை அளித்தார். தாதாஸ்ரீ அவர்களின் உயிர் பிரிந்த பிறகு, பூஜ்ய நிருமா ஒரு செயல் புரியும் கருவியாக, தாதாஸ்ரீ அவர்களின் ஆன்மீக சொற்பொழிவுகள் மற்றும் ஆத்ம ஞானத்தை, ஆன்மீக நாட்டமுடையவர்களுக்கு வழங்கினார்.

தாதாஸ்ரீ, பூஜ்ய தீபக்பாய் தேசாய் அவர்களுக்கும் ஆன்மீக சொற்பொழிவுகள் நடத்துவதற்கான ஆன்மீக சக்தியை அளித்தார். இப்போது பூஜ்ய தீபக்பாய், பூஜ்ய நிருமா அவர்களின் ஆசியினால், ஒரு செயல் புரியும் கருவியாக தேசம் மற்றும் சர்வதேச நாடுகளுக்கு சென்று ஆத்ம ஞானம் வழங்கி வருகிறார்.

ஆத்ம ஞானத்தை அடைந்த பிறகு, ஆயிரக்கணக்கான ஆன்மீக நாட்டமுடையவர்கள் தங்கள் உலகப் பொறுப்புகள் அனைத்தையும் நிறைவேற்றிக் கொண்டே, உலகியல் பந்தத்தில் இருந்து விடுபட்டு ஆத்ம ஞான நிலையில் நிலைபெறுகின்றார்.

❖ ❖ ❖ ❖ ❖

# இந்த மொழிபெயர்ப்பு பற்றிய குறிப்பு

அம்பாலால் எம்.பட்டேல், பொதுவாக தாதாஶ்ரீ அல்லது தாதா என்று அழைக்கப்படும் ஞானி புருஷ் அவர்கள், ஆன்மீக ஆர்வலர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் வடிவில் ஆன்மீக சொற்பொழிவுகளை வழங்கினார்.

இந்த சொற்பொழிவுகள் பூஜ்ய டாக்டர் நிருபென் அமீன் அவர்களால் பதிவு செய்யப்பட்டு, குஜராத்தி மொழியில் புத்தகங்களாக தொகுக்கப்பட்டது, தாதாஶ்ரீ தனது *சத்சங்கம்* மற்றும் ஆத்ம அனுபவ விஞ்ஞானத்தை பற்றிய ஞானத்தை வார்த்தைக்கு வார்த்தை மற்ற மொழிகளில் மொழிபெயர்ப்பது சாத்தியம் இல்லை. ஏனெனில் சில அர்த்தங்கள் அதில் இழக்க நேரிடும் என்று கூறியுள்ளார். எனவே *அக்ரம் விஞ்ஞானம்* மூலம் ஆத்ம அனுபவத்தை துல்லியமாக புரிந்து கொள்வதற்காக குஜராத்தி கற்க வேண்டியதன் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார். இருப்பினும், தாதாஶ்ரீ தனது சொற்பொழிவை பிற மொழிகளில் மொழிபெயர்க்க தனது ஆசீர்வாதம் வழங்கினார். ஏனென்றால் ஆன்மீகத்தை பற்றி கண்டறிய விரும்புபவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு பயனடைந்து, பின்னர் தங்கள் சொந்த முயற்ச்சியின் மூலம் முன்னேறி விடுவார்கள்.

இந்த புத்தகம் நேரடி மொழிபெயர்ப்பு அல்ல அவரது மூல முதலான சொற்பொழிவு சாரத்தை பாதுகாக்க அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஆன்மீக சொற்பொழிவுகள் குஜராத்தி மொழியில் இருந்து தொடர்ந்து மொழிபெயர்கப்பட்டு வருகின்றன. சில குஜராத்தி வார்த்தைகளின் அர்த்தத்தை வெளிப்படுத்துவதற்கு பல

மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தைகள் அல்லது வாக்கியங்கள் தேவைபடுகின்றன. எனவே, குஜராத்தி வார்த்தைகளை சிறந்த புரிதலுக்காக மொழி பெயர்க்கப்பட்ட உரைக்குள் தக்கவைக்கப்பட்டுள்ளன. குஜராத்தி வார்த்தையை முதன்முறையாக பயன்படுத்தப்பட்ட இடத்தை அதை சாய்வாக எழுதி அதை தொடர்ந்து அடைப்புக் குறிக்குள் அதன் அர்த்தத்தை விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. பின் வரும் உரையில் குஜராத்தி வார்த்தை மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. இது இரண்டு மடங்கு நன்மைகளை வழங்குகிறது. முதலாவதாக, மொழிபெயர்ப்பின் எளிமை வாசிப்பதற்கு, மற்றும் இரண்டாவதாக இந்த ஆன்மீக விஞ்ஞானத்தை நன்றாக புரிந்துகொள்வதற்கு முக்கியமான குஜராத்தி வார்த்தைகள், வாசகருக்கு பரிச்சயமாகிறது.

சதுர அடைப்பு குறிக்குள் இருக்கும் உள்ளடக்கம், விஷயத்தின் கூடுதல் தெளிவை அளிக்கிறது. இது குஜராத்தி உள்ளடக்கத்தில் இல்லை.

தாதாஸ்ரீ அவர்களின் ஞான சாரத்தை உலகிற்கு முன் வைக்கும் பணிவான முயற்சி இது. இந்த மொழிபெயர்ப்பை படிக்கும்போது ஏதேனும் முரண்பாடு இருந்தால், அது மொழிபெயர்பாளர்களின் தவறு மட்டுமே, விஷயத்தைப் பற்றிய தெளிவான புரிதலை வாழும் ஞானியிடம் தெளிவுபடுத்தி கொள்ளவேண்டும்.

❖ ❖ ❖ ❖❖

# தலையங்கம்

ஒருவர் தன்னுடைய மனதையும், பேச்சையும், உடலையும் பிறரின் மகிழ்ச்சிக்காக பயன்படுத்தினால், இந்த உலக வாழ்க்கையில் அவருடைய மகிழ்ச்சிக்கு குறைவே இருக்காது. மேலும், ஆத்ம ஞானம் பெற்றவர் நிலையான பேரானந்தம் அடைகிறார். இதுவே மனித வாழ்வின் குறிக்கோள் ஆகும். இந்த குறிக்கோளை ஒருவர் பின்பற்ற தொடங்கினால், அவர் இந்த மனித வாழ்க்கையில் மோட்ச நிலையை அடைவார். இதற்கு மேல், இந்த மனித ஜென்மத்தில் ஒரு மனிதன் சாதிக்க வேண்டிய விஷயம் வேறு எதுவும் இல்லை!

ஒரு மாமரம் தன் சொந்த கனிகளை ருசிக்கின்றதா? அதன் கனிகள், மரம், இலைகள் என அனைத்தும் பிறருக்காக மட்டுமே பயன்படுத்தப்படுகிறது, அல்லவா! அதன் விளைவாக, அது உயர்ந்த வாழ்க்கை நிலையை நோக்கி முன்னேறிக்கொண்டே இருக்கிறது. உண்மையில், ஒரு மதம் என்பது உதவும் பண்பினை அடிப்படையாக கொண்டது. ஒருவரின் மகிழ்ச்சி, அவர் பிறருக்கு கொடுக்க ஆரம்பிக்கும் தருணத்திலிருந்து துவங்குகிறது.

மதிப்புமிக்க தாதாஸ்ரீ அவர்கள் இதை ஒரே வாக்கியத்தில், "பெற்றோருக்கு பணிவிடை செய்யும் குழந்தைகளுக்கு ஒருபோதும் பணப் பற்றாக்குறை ஏற்படாது. அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் அவர்கள் தங்கள் வாழ்க்கையில் பெறுவார்கள். அதுபோல, ஆத்ம ஞானம் அடைந்த குருவுக்கு பணிவிடை செய்பவர் முக்தி அடைவார்!" என்று குறிப்பிடுகிறார்.

"நான் சந்திக்கும் ஒவ்வொருவரும், கண்டிப்பாக மகிழ்ச்சி அடைய வேண்டும்" என்பதையே தாதாஸ்ரீ அவர்கள் அவரது வாழ்நாள் முழுவதும் குறிக்கோளாக கடைப்பிடித்துள்ளார்; அவர் தனது மகிழ்ச்சியை பற்றி நினைத்தது இல்லை. மாறாக, 'மற்றவர்களின் சிரமம் என்ன? அந்த சிரமத்தை எப்படி நீக்குவது?' என்ற எண்ணத்திலேயே அவர் வாழ்ந்தார். அதனால்தான், அவருக்குள் கருணை வெளிப்பட்டது. மிகவும் அற்புதமான, ஆன்மீக விஞ்ஞானம் வெளிப்பட்டது.

இந்த தொகுப்பின் மூலம், தாதாஸ்ரீ அவர்கள் எளிமையான, மிகவும் துல்லியமான எடுத்துக்காட்டுகள் மூலம், பிறருக்கு உதவும் எண்ணத்துடன் மனித வாழ்க்கையின் குறிக்கோளை ஒவ்வொரு அம்சத்திலும் எவ்வாறு அடைவது என்பதைப் பற்றிய புரிதலை நமக்கு வழங்குகிறார். இந்த புரிதலை நம் வாழ்வின் குறிக்கோளாக அமைத்துக் கொண்டால், இந்த மனிதப் பிறவி வெற்றி பெற்றதாக கருதப்படும்!

**-டாக்டர் நிரூபன் அமீன்**

# பிறருக்கு உதவி செய்வதற்கான சரியான புரிதல்

## மனித வாழ்வின் முக்கியத்துவம்

**கேள்வி கேட்பவர்:** இந்த மனித வாழ்க்கை வீணாகாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?

**தாதாஸ்ரீ:** 'இந்த மனித வாழ்க்கை வீணாகிவிடக் கூடாது' என்பதைப் பற்றி மட்டும் நீங்கள் நாள் முழுவதும் சிந்தித்தால், உங்களுக்கு வெற்றி கிடைக்கும். இந்த மனித வாழ்க்கையைப் பற்றி கவலைப்படாமல், பணத்தைப் பற்றி மட்டுமே மக்கள் கவலைப்படுகிறார்கள்! முயற்சிகளை மேற்கொள்வது உங்கள் கைகளில் இல்லை. ஆனால், உள்நோக்கத்துடன் *(பாவ்)* இருப்பது உங்கள் கைகளில் இருக்கிறது. முயற்சிகளை மேற்கொள்வது வேறொன்றின் கட்டுப்பாட்டில் உள்ளது. உங்கள் உள்நோக்கத்தின் பலனை நீங்கள் அடைவீர்கள். உண்மையில், உங்கள் உள்நோக்கம் கூட உங்கள் கட்டுப்பாட்டில் இல்லை. ஆனால், நீங்கள் கொண்டிருக்கும் உள்நோக்கத்தின் பலனை நீங்கள் நிச்சயமாக அடைவீர்கள்.

**கேள்வி கேட்பவர்:** மனித வாழ்க்கையின் முக்கியத்துவம் என்ன?

**தாதாஸ்ரீ:** மனித வாழ்க்கை என்பது பிறருக்கு உதவுவது *(பரோப்கார்)* ஆகும். இந்திய நாட்டில் வாழும் மக்களின் வாழ்க்கை

பரிபூரணத்துவத்தை, அதாவது மோட்சத்தை அடைவதற்கானதே ஆகும். இந்தியாவைத் தவிர மற்ற நாடுகளில் வாழும் மக்களின் வாழ்க்கை, பிறருக்கு உதவுவதற்கானதாகும். பிறருக்கு உதவுவது என்பது நம் மனதையும், பேச்சையும், நடத்தையையும் பிறருக்காக பயன்படுத்துப்பட வேண்டும் என்பதாகும்! மனம், பேச்சு, உடல் ஆகியவற்றின் மூலம் பிறருக்கு உதவி செய்ய வேண்டும். இப்போது ஒருவர், “அப்படியானால், என் நிலை என்ன ஆகும்?” என்று கேள்வி எழுப்பலாம். ஒருவர் பிறருக்கு உதவி செய்து கொண்டிருந்தால், அவருக்கென்று என்ன மிஞ்சப் போகிறது?

**கேள்வி கேட்பவர்:** அவர் நிச்சயமாக பலன் பெறுவார், அப்படித்தானே!

**தாதாஶ்ரீ:** ஆம். ஆனால், ‘நான் பிறருக்கு கொடுத்தால், என்னுடையதை நான் இழந்துவிடுவேன்’ என்றே மக்கள் நம்புகிறார்கள்.

**கேள்வி கேட்பவர்:** கீழ்த்தரமான சிந்தனை உள்ளவர்கள் அவ்வாறு நம்பிக்கை கொள்வார்கள்.

**தாதாஶ்ரீ:** உயர்ந்த தரமான சிந்தனை கொண்ட ஒருவர், ‘மற்றவர்களுக்குக் கொடுப்பது சரி’ என்று நம்புகிறார்.

## பிறருக்கு உதவுவதற்காக வாழுங்கள்...

பிறருக்கு உதவி செய்வதற்கு பின்னால் மறைந்திருக்கும் அறிவியல் என்னவென்றால், உங்கள் மனம், பேச்சு மற்றும் உடலைப் பயன்படுத்தி, நீங்கள் பிறருக்கு உதவி செய்தால், உங்களுக்கு கிடைக்க வேண்டியவை அனைத்தும் உங்களுக்கு கிடைத்துவிடும். பிறருக்கு உதவி செய்வதற்காக நீங்கள் அவற்றைப் பயன்படுத்திவிட்டு, அதற்கு ஒரு கட்டணம் வசூலித்தால் என்னவாகும்?

**கேள்வி கேட்பவர்:** அது சிரமங்களை உருவாக்கும்.

**தாதாஸ்ரீ:** “இதற்கு நூறு ரூபாய் செலவாகும். இதற்கு நூற்றைம்பது ரூபாய் செலவாகும்” என்று நீதிமன்றங்களில் கட்டணம் வசூலிக்கிறார்கள். இதனால் ஒருவர், “ஐயா, நூற்றைம்பது ரூபாய் வாங்கிக் கொள்ளுங்கள்” என்று கூறுவார். இருப்பினும், பரோபகாரச் சட்டம் *(பரோப்கார்)* இப்பொழுதெல்லாம் பொருந்தாது, அல்லவா!

**கேள்வி கேட்பவர்:** ஒரு நபரின் மனதிற்குள் வேறு ஏதேனும் ஒரு ஆசை இருக்கும் பட்சத்தில், அவர் கண்டிப்பாக அதை வெளிப்படுத்த வேண்டும், இல்லையா?

**தாதாஸ்ரீ:** அதைப் பற்றியெல்லாம் நீங்கள் சிந்திக்க வேண்டாம். நீங்கள் பிறருக்கு ஏதேனும் ஒரு வகையில் உதவி செய்யும் போது, நீங்கள் எந்த சிரமங்களிலும் சிக்கிக்கொள்ள மாட்டீர்கள். தற்போது, மக்களுக்கு என்ன நடக்கிறது? ஒரு நபர் அரைகுறையான புரிதலுடன் பிறருக்கு உதவ முயற்சிக்கும் போது, அதனால் எதிர்மறையான விளைவுகள் உண்டாகிறது. அதனால், அவருடைய மனதில் நம்பிக்கை நிலையாக இருக்காமல், மறைந்துவிடுகிறது. ஒரு நபர் இந்த ஜென்மத்தில் (பிறருக்கு உதவ) ஆரம்பித்தால், இரண்டு அல்லது மூன்று ஜென்மங்களில், அவர் அதற்குரிய வெகுமதிகளை பெறுவார். இது மிகவும் துல்லியமான அறிவியல் ஆகும்.

## நல்லவர் - கெட்டவர்களுக்கு, சமமாக உதவி செய்யுங்கள்

**கேள்வி கேட்பவர்:** மக்கள் பிறருக்கு உதவுவதற்காகவே வாழ்கிறார்கள். ஏனென்றால், அது ஒரு நற்காரியம். மேலும், அவர்கள் மற்றவர்களுக்கும் (அதை செய்யும்படி) சொல்கிறார்கள். ஆனால்,

பிறரின் நலனுக்காக ஒருவர் ஏதேனும் சொல்லும்போது, 'என் நலனுக்காகவே இவர் இதைச் சொல்கிறார்' என்பதை யாரும் புரிந்து கொள்ளத் தயாராக இல்லை என்றால், என்ன செய்வது?

**தாதாஸ்ரீ:** இது எப்படியென்றால், பிறருக்கு உதவி செய்பவர், மற்றவரின் புரிதலைப் பற்றி கருத்தில் கொள்ளமாட்டார். பிறருக்கு உதவும் ஒரு நபர், மற்றவரின் புரிதலைப் பற்றி கருத்தில் கொண்டால், அது அவரைப் பற்றிய மதிப்பீட்டை தீர்மானித்து விட்டதாக கருதப்பட்டுவிடும். எனவே, மற்றவர்களின் புரிதலை நாம் கருத்தில் கொள்ளக்கூடாது.

இங்கு இருக்கும் மரங்கள் அனைத்திலும், உதாரணமாக மா மரங்கள், வேப்ப மரங்கள் மற்றும் இதர மரங்கள் யாவற்றிலும் கனிகள் காய்க்கின்றன. ஆதலால், மாமரம் தன் மரத்தின் மாங்கனிகளில் எத்தனை கனிகளை உண்கிறது?

**கேள்வி கேட்பவர்:** ஒன்றை கூட உண்ணுவதில்லை.

**தாதாஸ்ரீ:** மாங்கனிகள் யாருக்காக இருக்கின்றன?

**கேள்வி கேட்பவர்:** மற்றவர்களுக்காக.

**தாதாஸ்ரீ:** ஆம், 'இந்த நபர் சதி செய்பவர் அல்லது இவர் நல்லவர்' என்பதை அந்த மாமரம் கருத்தில் கொள்கிறதா? 'மாங்கனிகளை யார் எடுக்கிறார்களோ, அவர்களுக்கே அது சொந்தமாகிறது; அவை என்னுடையது (மாமரத்தினுடையது) அல்ல.' அப்படி ஒரு பரோபகாரமான வாழ்க்கையை வாழ்கிறது. இவ்வகையான வாழ்க்கையை வாழ்வதன் மூலம் அத்தகைய உயிரினங்கள் (மரங்கள்), படிப்படியாக உயர்ந்த வாழ்க்கை நிலைக்கு முன்னேறுகின்றன.

**கேள்வி கேட்பவர்:** ஆனால், பல சமயங்களில், ஒருவர்,

தனக்கு உதவி செய்தவரையே குற்றம் சாட்டுகிறார்.

**தாதாஸ்ரீ:** ஆம். இதைத்தான் நாம் இங்கு கவனிக்க வேண்டும், அல்லவா? பரோபகாரம் செய்பவர்களை கூட நன்றியுணர்வில்லாமல் நடத்துகிறார்கள்.

**கேள்வி கேட்பவர்:** சரியான புரிதல் இல்லாததால் தான்!

**தாதாஸ்ரீ:** அத்தகைய சரியான புரிதலை ஒருவரால் எங்கிருந்து பெற முடியும்? அத்தகைய சரியான புரிதல் ஒருவருக்கு இருந்தால், அவருடைய 'வேலை' நிச்சயமாக நிறைவேறிவிடும், அல்லவா! அத்தகைய புரிதலை ஒருவரால் எங்கிருந்து பெற முடியும்?

உண்மையில், பரோபகாரம் என்பது உயர்ந்த நிலை ஆகும். பிறருக்கு உதவும் வாழ்க்கையே, மனித வாழ்க்கையின் இலக்காகும்.

## வாழ்க்கையில், இந்த இரண்டு விஷயங்கள் மட்டுமே முக்கிய நோக்கங்கள்

மேலும், இந்தியாவில் வாழும் மக்களுடைய வாழ்க்கையின் நோக்கம் என்ன? ஒருவர், தன் பந்தப் பிணைப்புகளிலிருந்து நிரந்தரமாக விடுபட்டு, பரம நிலை (ஞான சொரூபம்) அடைவது தான், இந்த வாழ்க்கையின் நோக்கம் ஆகும். மற்றும், பரம நிலை அடைவதற்கான ஞானம் அடையவில்லை என்றால், பிறருக்கு உதவி செய்வதற்காக வாழ வேண்டும். இந்த இரண்டு நோக்கங்களையும் நிறைவேற்றுவதற்காக தான் ஒருவர் இந்தியாவில் பிறக்கிறார். ஆனால், இந்த இரண்டு நோக்கங்களையும் மக்கள் உண்மையில் நிறைவேற்றுகிறார்களா? மாறாக, மக்கள் கலப்படம் செய்வதால், மனித வாழ்க்கையிலிருந்து விலங்கு வாழ்க்கை கதிக்கு செல்வதற்கான கலையை கண்டறிந்துள்ளனர்.

## எளிமையாக இருப்பதற்கான தீர்வுகள்

**கேள்வி கேட்பவர்:** வாழ்க்கையை நல்லொழுக்கமாகவும் *(சாத்விக்)*, எளிமையாகவும் *(சரல்)* மாற்றுவதற்கான வழிமுறைகள் என்ன?

**தாதாஸ்ரீ:** உங்களிடம் உள்ள அனைத்தையும் உதவும் பண்புடன் மக்களுக்குக் கொடுத்துக்கொண்டே இருங்கள். உங்கள் வாழ்க்கை தானாகவே, படிப்படியாக நல்லொழுக்கம் நிறைந்த வாழ்க்கையாக மாறிவிடும். நீங்கள் எப்போதாவது உதவும் பண்புடன் இருந்திருக்கிறீர்களா? நீங்கள் உதவும் பண்பினை விரும்புகிறீர்களா?

**கேள்வி கேட்பவர்:** என்னிடம் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு இருக்கிறது.

**தாதாஸ்ரீ:** நீங்கள் அதிக அளவில் கொண்டிருந்தால், நீங்கள் அதிக பலன் அடைவீர்கள். தொடர்ந்து மக்களுக்கு உதவி செய்யுங்கள். ஒருவரின் வேலையை முடிக்க அவருக்கு உதவி செய்யுங்கள், மற்றவர்களுக்கு தேவையான பொருட்களை வாங்கி கொடுங்கள், பணத்தை நன்கொடையாக வழங்குங்கள், வசதி இல்லாதவருக்கு இரண்டு செட் துணிகளைத் தைத்துக்கொடுங்கள்; இதுபோன்று மற்றவர்களுக்கு உதவி செய்யுங்கள்.

"உனது மனது, பேச்சு, உடல் மற்றும் சார்ந்த ஆத்மாவின் *(ப்ரதிஷ்டித் ஆத்மாவின்)* விழிப்புணர்வுவை பிறர் நலனுக்காக பயன்படுத்து. அதன்பிறகு, உனக்கு ஏதேனும் துக்கம் ஏற்பட்டால், எனக்கு தெரியப்படுத்து" என்று பகவான் கூறியுள்ளார்.

உண்மையில், மதம் என்பது உதவும் பண்பில் இருந்து தான் துவங்குகிறது. உங்களுடைய பொருளை நீங்கள் பிறருக்கு கொடுக்கும்போது, உண்மையில் அங்குதான் மகிழ்ச்சி இருக்கிறது.

மாறாக, மக்கள் மற்றவர்களிடமிருந்து எடுத்துக் கொள்ள கற்றுக்கொள்கிறார்கள்! உங்களுக்காக நீங்கள் எதையும் செய்யாதீர்கள். பிறருக்காகவே (அனைத்தையும்) செய்யவும். பிறகு, உங்களுக்காக நீங்கள் எதையும் செய்ய வேண்டியதில்லை.

## உள்நோக்கம் நூறு சதவீதம் இருக்க வேண்டும்

எந்த மரமாவது அதன் கனிகளை தானே உண்ணுகிறதா?, இல்லை. எனவே, இந்த மரங்கள், மனிதர்களுக்கு, 'நீ உன்னுடைய 'கனிகளை' பிறருக்கு அளிக்கவும். இயற்கை உனக்கு அளிக்கும்' என்பதை கற்றுத்தருகிறது. வேப்பமரம் உண்மையில் கசப்பானது. ஆனால், அதன் மூலம் கிடைக்கும் இதர பலன்களின் காரணமாக மக்கள் அதன் நாற்றை நடுகிறார்கள். இல்லையெனில், அவர்கள் நிச்சயமாக வேப்பமரக்கன்றுகளை வேரோடு பிடுங்கிவிடுவார்கள். ஆனால், அது மற்ற வகையில் பயனளிக்கிறது; உதாரணமாக, அது குளிர்ச்சி அளிக்கிறது, அதன் மருத்துவ குணம் பயனளிக்கிறது, அதன் சாறு நன்மை பயக்கின்றது. *சத்யுகத்தில்* (இந்து புராணங்களின்படி, நான்கு யுகங்களில் முதலாவது யுகம், நல்லொழுக்கம், ஞானம், மகிழ்ச்சி மற்றும் நன்னடத்தைக்கு உட்பட்ட யுகம்), மக்கள் மற்றவர்களை மகிழ்விக்க மட்டுமே முயற்சி செய்தார்கள். நாள் முழுவதும் 'நான் யாருக்கு உதவுவது' என்ற எண்ணம் மட்டும்தான் எழுந்து கொண்டிருந்தது.

உங்களால் வெளிப்படையாக பிறருக்கு அதிகம் உதவி செய்ய முடியாவிட்டாலும் பரவாயில்லை. ஆனால், கண்டிப்பாக உங்கள் உள்நோக்கம் *(பாவ்)*, 'என்னிடம் பணம் இருக்கிறது, அதைக் கொண்டு பிறரின் துன்பத்தை நான் குறைக்க விரும்புகிறேன்' என்று இருக்க வேண்டும். உங்களிடம் அறிவு இருந்தால், 'என் அறிவை பயன்படுத்தியாவது, பிறருக்கு விளக்கி புரியவைத்து, ஒருவருடைய துயரத்தைக் குறைக்க நான் விரும்புகிறேன்' என்று நீங்கள் எண்ண வேண்டும். உங்களிடம் எது

அதிகமாக இருந்தாலும், அதை மற்றவர்களுக்கு கொடுத்து உதவுங்கள். இல்லையெனில், குறைந்தபட்சம், உதவும் பண்புடன் வாழுங்கள். உதவும் பண்பு கொண்டிருப்பதன் அர்த்தம் என்ன தெரியுமா? பிறருக்கு உதவுகின்ற இயல்பு ஆகும்!

ஒருவருக்கு உதவும் பண்பு இருந்தால், அவருடைய சுபாவம் மிகவும் அற்புதமானதாக இருக்கும்! பணத்தைக் கொடுத்து உதவி செய்வது மட்டுமே உதவும் பண்பாக கருதப்படுவதில்லை. உங்களிடம் பணம் இருக்கலாம் அல்லது இல்லாமல் இருக்கலாம். எப்படி இருந்தாலும், 'நான் எப்படி மற்றவர்களுக்கு உதவியாக இருக்க முடியும்?' என்பதே உங்கள் எண்ணமாகவும், விருப்பமாகவும் இருக்க வேண்டும். உங்கள் வீட்டிற்கு யாரேனும் வந்தால், 'அவருக்கு நான் எப்படி உதவி செய்வது?' என்ற எண்ணம் உங்களுக்கு இருக்க வேண்டும். பணத்தைக் கொடுப்பதும், கொடுக்காமல் இருப்பதும் உங்கள் (பொருளாதார) சூழலைப் பொறுத்தது.

பிறருக்கு உதவி செய்வதற்கு பணம் மட்டுமே வழி இல்லை; அது கொடுப்பவரின் திறனைப் பொறுத்தது. 'பிறருக்கு நான் எப்படி உதவுவது?' என்ற எண்ணத்தை மட்டும் நீங்கள் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட எண்ணம் இருக்கிறதா என்று மட்டும் நீங்கள் உறுதி செய்துக் கொள்ள வேண்டும்.

## வாழ்க்கையின் குறிக்கோள்

இதன் (உதவும் பண்பின்) மூலம், ஓரளவுக்கு நம்முடைய இலக்கை முன்னோக்கிச் செல்ல முடிகிறது. இலக்கு இல்லாத வாழ்க்கையில் எந்த அர்த்தமும் இல்லை. நீங்கள் பணம் சம்பாதித்து, உணவு உட்கொண்டு, பருகி, மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள், மற்றும் நாள் முழுவதும் கவலையுடன் இருக்கிறீர்கள்; இதை எப்படி வாழ்க்கையின் குறிக்கோளாகக் கருத முடியும்?

உங்களுக்கு கிடைத்திருக்கும் இந்த மனித வாழ்க்கை, வீணாக கழிவதில் என்ன பயன் இருக்கிறது? எனவே, மனித பிறப்பை அடைந்த பிறகு, உங்கள் குறிக்கோளை நிறைவேற்ற நீங்கள் என்ன செய்ய வேண்டும்? உங்களுக்கு உலக இன்பம், பௌதிக இன்பம் வேண்டுமானால், உங்களிடம் இருப்பதை நீங்கள் மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும். நீங்கள் மற்றவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தால், நீங்கள் உங்களுக்கான மகிழ்ச்சியை எதிர்பார்க்கலாம்; இல்லையெனில், உங்களுக்கு மகிழ்ச்சி கிடைக்காது. மேலும் நீங்கள் மற்றவர்களுக்கு துன்பம் கொடுத்தால், பதிலுக்கு நீங்கள் துன்பத்தை பெறுவீர்கள்.

இவ்வுலகின் சட்டத்தை ஒரே வாக்கியத்தில் புரிந்து கொள்ளுங்கள், இவ்வுலகின் அனைத்து மதங்களிலும், 'மகிழ்ச்சி வேண்டுவோர், மற்ற அனைத்து உயிரினங்களுக்கும் மகிழ்ச்சி அளிக்க வேண்டும். துன்பம் வேண்டுவோர், மற்றவர்களை துன்பப்படுத்த வேண்டும்'. நீங்கள் விரும்புவதை அளிக்கவும். இப்போது, சிலர் கேட்கலாம், "எங்களிடம் பணம் இல்லாமல், மற்றவர்களை மகிழ்விப்பது எப்படி சாத்தியம்?" பணத்தால் மட்டுமே மகிழ்ச்சி கொடுக்க முடியும் என்பதல்ல, நீங்கள் அவர்களுக்கு உதவும் பண்புடன் இருக்கலாம், அவர்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொடுக்கலாம், அல்லது அவர்களுக்கு ஆலோசனை வழங்கலாம். நீங்கள் இப்படி பல்வேறு வழிகளில் பிறருக்கு உதவும் பண்புடன் இருக்கலாம்.

மதம் *(தர்மா)* என்றால் கடவுளின் சிலைக்கு முன் அமர்வது மட்டும் அல்ல; அது மதம் *(தர்மா)* என்பதாகாது. உங்களுடைய குறிக்கோளை அடைவதே; மதம் *(தர்மா)* என்பதாகும். அதனுடன், நீங்கள் உங்கள் மனதை ஒருநிலைப்படுத்துவதற்காக ஏதேனும் ஒரு பயிற்சியில் ஈடுபட்டால், அது முற்றிலும் வேறுபட்ட விஷயமாகும்; இருப்பினும், இந்த விஷயத்தில் ஒருநிலைப்படுத்தினால், இது மற்ற அனைத்து விஷயங்களும் உள்ளடங்கிவிடும். எனவே, உதவும்

பண்பினை கடைபிடியுங்கள்; 'நான் பிறருக்கு உதவிக் கொண்டே இருக்க வேண்டும்' என்று முடிவு செய்யுங்கள். அப்போது, உங்களுக்குள் மாற்றங்கள் ஏற்படும். "நான் முரட்டுதனமாக செயல்படக் கூடாது. மற்றவர் என்னிடம் ஆக்ரோஷமாக நடந்து கொண்டாலும், நான் அவரிடம் அப்படி ஆக்ரோஷமாக நடந்துகொள்ளக் கூடாது" என்று முடிவு செய்யுங்கள். அப்படி நீங்கள் முடிவு செய்தால், மாற்றங்கள் ஏற்படும். மாற்றங்கள் ஏற்படாதா என்ன? நீங்கள் ஒரு முடிவை எடுத்த தருணத்தில் இருந்து, சில மாற்றங்கள் ஏற்படும், அல்லவா?

**கேள்வி கேட்பவர்:** ஆனால், அது கடினம்.

**தாதாஸ்ரீ:** அது கடினமாக இருந்தாலும், நீங்கள் தீர்மானித்துக் கொள்ளலாம். ஏனென்றால், நீங்கள் ஒரு மனிதர்; மேலும், நீங்கள் இந்தியாவில் பிறந்த ஒரு மனிதர். நீங்கள் என்ன சாதாரணமான ஒரு மனிதரா? இல்லை. நீங்கள் பண்டைய முனிவர்களின் *(ருஷிமுனி)* சந்ததியினர்! (எல்லையற்ற) ஆற்றல்கள் உங்களுக்குள் இருக்கின்றன. அவை (அஞ்ஞான) திரைகளால் வெளிப்படாமல் இருப்பதால், உங்களுக்கு எந்த பயனும் கிடைப்பதில்லை? நான் உங்களுக்கு உபதேசம் செய்வதன் அடிப்படையில், 'நான் இதை முற்றிலும் செய்து முடிக்க விரும்புகிறேன்' என்று நீங்கள் தீர்மானித்தால், அது நிச்சயம் நிறைவேறும். இல்லையெனில், இன்னும் எவ்வளவு காலம் இந்த ஆக்ரோஷ குணத்துடன் செயல்பட்டுக் கொண்டு இருப்பீர்கள்? மேலும், நீங்கள் எந்த விதமான மகிழ்ச்சியையும் பெறுவதில்லை; இப்படி ஆக்ரோஷப்படுவதினால் உங்களுக்கு ஏதாவது மகிழ்ச்சி கிடைக்கிறதா?

**கேள்வி கேட்பவர்:** இல்லை.

**தாதாஸ்ரீ:** மாறாக, நீங்கள் சிரமத்தைத் தவிர வேறு

எதையும் வரவழைத்துக் கொள்வதில்லை.

## பரோபகாரத்தினால், புண்ணிய கர்மா உடன் வரும்

மோட்சம் *(மோக்ஷ்)* அடையும் வரை, புண்ணிய கர்மா *(புண்ய)* மட்டுமே ஒருவரின் நண்பராகவும், தீய கர்மா *(பாப்)* ஒருவரின் எதிரியாகவும் செயல்படுகிறது. இப்பொழுது, நீங்கள் ஒரு எதிரியை உங்களுடன் வைத்திருக்க விரும்புகிறீர்களா? அல்லது ஒரு நண்பரை வைத்திருக்க விரும்புகிறீர்களா? உங்களுக்கு எது விருப்பமோ அதன்படி முடிவு செய்யுங்கள். மேலும், ஒரு நண்பரை திரட்டும் சூழ்நிலையை *(சன்ஜோக்)*, எவ்வாறு ஏற்படுத்துவது மற்றும் ஒரு எதிரியை விலக்கும் சூழ்நிலையை எவ்வாறு ஏற்படுத்துவது, என்பதை நீங்கள் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். ஒருவர் எதிரியுடன் இருக்க விரும்பி, அதற்கான சூழ்நிலையை அமைத்துக் கொள்வதைப் பற்றி என்னிடம் கேட்டால், நான் அந்த நபரிடம், "நீ எப்படி வேண்டுமானாலும் செலவு செய்து கடனில் மாட்டிக் கொண்டு, ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்துக் கொண்டு, பொறுப்பில்லாமல் திரிந்துக் கொண்டு, உன் விருப்பம் போல் எல்லாவற்றையும் அனுபவித்துக்கொள். ஆனால், இதற்கான பின்விளைவுகள் வரும்போது, அதை நீயே சமாளித்துக் கொள்!" என்று கூறுவேன். மற்றும், நண்பரின் வடிவில் புண்ணிய கர்மாவை உடன் வைத்துக் கொள்ள ஒருவர் விரும்பினால், நான் அவரிடம் ஒரு மரத்தை சுட்டிக்காட்டி, "அன்புள்ள மனிதனே, இந்த மரத்தைப் பார்த்துக் கற்றுக்கொள். எந்த மரமாவது, அதன் கனிகளை உண்கிறதா? ரோஜா செடி எப்போதாவது தன் பூவை தானே உண்கிறதா?" என்று சொல்லி புரியவைப்பேன். ஒரு மரம் அதன் கனிகளை கொஞ்சமாவது சாப்பிட வேண்டும், அல்லவா? நாம் அதை சுற்றி இல்லாத இரவு நேரங்களில், அது அந்த கனிகளை சாப்பிட வேண்டும், அல்லவா? அப்படி அந்த மரம் உண்கிறதா என்ன?

**கேள்வி கேட்பவர்:** இல்லை.

**தாதாஸ்ரீ:** இந்த மரங்களும், செடி கொடிகளும் மனிதர்களுக்கு கனிகளை அளித்து சேவை செய்கின்றன. இப்போது, இதில் மரத்திற்கு என்ன லாபம்? அது ஒரு உயர்ந்த வாழ்க்கை நிலைக்கு பரிணமிக்கிறது. இதனால், மனிதர்களும் அதன் உதவியுடன் முன்னேறுகிறார்கள்! சற்று யோசித்துப் பாருங்கள், நீங்கள் ஒரு மாங்கனியை சாப்பிடும்போது, அந்த மாமரம் எதை இழக்கிறது? உங்களுக்கு என்ன லாபம் கிடைக்கிறது? நீங்கள் ஒரு மாங்கனியை சாப்பிட்டதால், மகிழ்ச்சி அடைகிறீர்கள். அதன் காரணமாக, உங்கள் உள்ளார்ந்த எண்ணங்களில் ஏற்படும் மாற்றம் உங்களுக்கு நூறு ரூபாய் மதிப்புக்கு நிகரான ஆன்மீக பலனைப் பெற்றுக் கொடுக்கிறது. இப்போது, நீங்கள் மாங்கனியைச் சாப்பிட்டதால், உங்களுக்கு கிடைக்கும் ஆன்மீக பலனில் சுமார் ஐந்து சதவிகிதம் அந்த மாமரத்திற்குச் செல்கிறது மற்றும் மீதமுள்ள தொண்ணூற்றைந்து சதவிகிதம் உங்களுக்கு கிடைக்கிறது. எனவே, அந்த மரம் உங்கள் பங்கிலிருந்து ஐந்து சதவீதத்தை எடுத்துக்கொள்கிறது. அதன் மூலம், அது உயர்ந்த வாழ்க்கை கதிக்கு பரிணமிக்கிறது. இதனால் உங்களுக்கு கீழ் வாழ்க்கை கதி ஏற்படுவதில்லை. நீங்களும் ஆன்மீக பாதையில் முன்னேறுகிறீர்கள். எனவே, அந்த மரங்கள், “என்னுடையது அனைத்தையும் நீ அனுபவித்துக் கொள், எல்லா வகையான கனிகளையும், பூக்களையும் நீ அனுபவித்துக் கொள்” என்று மனிதர்களிடம் கூறுகின்றன.

## *யோக்* மற்றும் *உபயோக்* மூலம் பிறருக்கு உதவுங்கள்

எனவே, இந்த உலகம் உங்களுக்கு ஏற்றுக்கொள்ளும் படியானதாக இருந்தால், இந்த உலகத்தை நீங்கள் விரும்பினால், உலக பொருட்களுக்கு ஆசை இருந்தால், உலகின் புலன் இன்பங்களுக்காக நீங்கள் ஏங்கினால், *‘யோக், உபயோக்*

*பரோப்காராய்'* (*யோக்* மற்றும் *உபயோக்* மூலம் பிறருக்கு உதவுதல்) மட்டும் செய்யுங்கள். *யோக்* என்றால் மனம், பேச்சு, உடல் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு ஆகும். *உபயோக்* என்றால் புத்தியின் உபயோகம், மனதின் உபயோகம், *சித்தத்தின்* உபயோகம் (உட்புறத்தில் செயல்படும் உட்கருவியான அந்தக்கரணம் என்பதில் உள்ள ஞானம் மற்றும் தரிசனம் உள்ளடக்கிய ஒரு நுட்பமான அங்கம்) இவை அனைத்தையும் மற்றவர்களுக்காகப் பயன்படுத்துங்கள். இவை மற்றவர்களுக்காகப் பயன்படுத்தப்படாவிட்டால், இறுதியில் மக்கள் அதை தங்கள் குடும்பத்திற்காகப் பயன்படுத்துவார்கள், அல்லவா! பெண் நாய் ஏன் உணவைத் தேடி அலைகிறது? ஏனென்றால் அதன் குட்டிகளுக்கு உள்ளே இறைவன் இருக்கிறார், அதனால் அது தன் குட்டிகளை கவனித்துக் கொள்கிறது. இதனாலேயே அதற்கு அனைத்தும் கிடைத்து விடுகிறது. இந்த அடிப்படையில் தான், உலகம் முழுவதும் இயங்குகிறது. மரங்களுக்கு எங்கிருந்து ஊட்டச்சத்து கிடைக்கிறது? மரங்கள் அதற்காக ஏதாவது முயற்சி செய்கிறதா? காரணம், அவை உணர்ச்சிவசப்படுவதில்லை. அவை எப்போதாவது உணர்ச்சிவசப்படுகிறதா? அவை முன்னும் பின்னும் நகருவதில்லை. 'விஸ்வாமித்ரி நதி ஒரு மைல் தூரத்தில் இருக்கிறது, நான் அங்கு சென்று கொஞ்சம் தண்ணீர் குடித்து வருகிறேன்!' என்று அவை ஒருபோதும் நினைப்பதில்லை.

நேர்மை மற்றும் பரஸ்பர உதவும் பண்பு ஆகியவை மட்டுமே ஒருவருக்குத் தேவையானதாகும். உண்மையில், ஒருவருக்கொருவர் உதவி செய்வது மனித வாழ்க்கையின் பாக்கியம் ஆகும்! இவ்வுலகில் இரண்டு வகையான மக்கள் மட்டுமே கவலைகள் இல்லாமல் வாழ்கிறார்கள். ஒருவர் *ஞானி புருஷர்* (ஆத்ம அனுபவம் அடைந்த ஒருவர், மேலும் மற்றவர்களுக்கும் ஆத்ம ஞானம் வழங்க கூடியவர்), மற்றொருவர் பிறருக்கு உதவி செய்பவர்.

## பிறருக்கு உதவி செய்வதற்கான சரியான வழிமுறை

**கேள்வி கேட்பவர்:** இந்த உலகில், நற்செயல்கள் என்று எதை குறிப்பிடுகிறது? அவற்றை விவரிப்பது சாத்தியமா?

**தாதாஸ்ரீ:** ஆம். இந்த மரங்கள் செய்பவை அனைத்தும் நற்செயல்களே; அவை முற்றிலும் நற்செயல்களை மட்டுமே செய்கின்றன. இருப்பினும், அந்த மரங்களுக்கு செய்பவன் என்ற உணர்வு *(கர்த்தாபாவ்)* இருப்பது இல்லை. இந்த மரங்கள் யாவும் உயிருள்ள ஜீவராசிகள். ஆவை அதனுடைய கனிகளை மற்றவர்களுக்காக கொடுக்கின்றன. அதேபோல, நீங்கள் உங்களுடைய ‘கனிகளை’ மற்றவர்களுக்காக கொடுங்கள். உங்களுடைய ‘கனிகளை’ நீங்கள் தொடர்ந்து பெறுவீர்கள். உங்களிடம் வெளிப்படும் ‘கனி’ எதுவாக இருந்தாலும், அதாவது அவை உடல், மனம் அல்லது பேச்சு என எதன் மூலம் வெளிப்பட்டாலும், அவற்றை பிறருக்கு நீங்கள் இலவசமாகக் கொடுத்தால், உங்களுக்குத் தேவையான அனைத்தையும் நீங்கள் தொடர்ந்து பெறுவீர்கள். உங்கள் வாழ்க்கையின் அவசிய தேவைகளைப் பெறுவதற்காக, நீங்கள் சிறிதளவு சிரமத்தை கூட சந்திக்க வேண்டியதிருக்காது. ஆனால், அந்த ‘கனிகளை’ நீங்களே உட்கொள்ளும்போது, நீங்கள் சிரமங்களைச் சந்திக்க நேரிடும். இந்த மாமரம் அதன் கனிகளைத் தானே உண்டுவிட்டால், அதன் உரிமையாளர் யாராக இருந்தாலும், அவர் என்ன செய்வார்? அந்த மரத்தை அவர் வெட்டிவிடுவார், அல்லவா? அதுபோல, இந்த மக்கள் தங்களின் ‘கனிகளை’ தாங்களே உட்கொண்டு விடுகிறார்கள், மேலும் அதற்கான கட்டணமும் வசூலிக்கிறார்கள்!

ஒரு கோரிக்கைப் படிவத்தை நிரப்ப மக்கள் இருபத்தி இரண்டு ரூபாய் வசூலிக்கிறார்கள்! சட்டம் சார்ந்த சேவைகள் இலவசமாக வழங்கப்பட்டு, ஒருவரை வீட்டிற்கு அழைத்து உணவளித்து அவருக்கு தேவையான சட்ட ஆலோசனை வழங்கும்

நாடாக இருந்தது; ஆனால் தற்போதைய நிலை இப்படி இருக்கிறது! முந்தைய காலங்களில், ஊரில் ஒரு கருத்து வேறுபாடு ஏற்பட்டால், "சந்துபாய், இன்று பத்தரை மணிக்கு என் வீட்டுக்கு வாங்க! நகின்பாய், நீங்களும் அதே சமயத்தில் என் வீட்டுக்கு வாங்க" என்று இரு தரப்பினரையும் ஊர்த் தலைவர் தன் வீட்டிற்கு அழைப்பார். நகின்பாய் அல்லாது, வேறு யாராக இருந்தாலும் அதாவது ஒரு தொழிலாளியோ, அல்லது ஒரு விவசாயியோ அல்லது பிரச்சனை உடையவர் யாராக இருந்தாலும், அவர்களை தன் வீட்டிற்கு அழைப்பார். இருவரையும் உட்கார வைத்து, இருவரையும் ஒரு உடன்பாட்டிற்குட்படுமாறு செய்து விடுவார். அவர்களில் கடனாளியாக இருப்பவர் கொடுக்க வேண்டிய பணத்தில் ஒரு பகுதியை பணமாக செலுத்தும்படி உத்தரவிட்டு, மீதியை தவணை முறையில் செலுத்த ஏற்பாடு செய்வார். பிறகு, இருவரிடமும், "வாருங்கள், என்னுடன் சேர்ந்து சாப்பிடுங்கள்" என்று கூறுவார். இருவருக்கும் உணவளித்துவிட்டு, அவர்களை வீட்டுக்கு அனுப்பி வைப்பார்! இப்படிப்பட்ட வழக்கறிஞர்கள் இன்று இருக்கிறார்களா? எனவே, தற்போதைய சூழ்நிலைகளைப் புரிந்துகொண்டு, அதற்கேற்ப நடந்து கொள்ளுங்கள். இருப்பினும், ஒரு நபர் தனது சுயநலத்திற்காக தன் சக்தியை செலவழித்தால், அவருடைய மரணத்தின் போது அவர் துன்பப்படுவார். அவரால் நிம்மதியாக உயிரையும் இழக்க முடிவதில்லை, மற்றும் அவருடைய பங்களாவையும், காரையும் விட்டுச் செல்லவும் முடிவதில்லை!

(கடந்த காலங்களில்) அறிவுரை வழங்குவதற்கு ஒருவர் பணம் வசூலிக்கமாட்டார். அவர் வேறு வழிகளில் பிரச்சனையை தீர்த்துவைப்பார்; அறிவுரை கேட்பவருக்கு தனது பாக்கெட்டிலிருந்து இரண்டாயிரம் ரூபாயைக் கூட கொடுப்பார். அதேசமயம், இப்போதெல்லாம் யாராவது ஆலோசனை கேட்டால், ஆலோசனை வழங்குவதற்கு நூறு ரூபாய் கட்டணம் வசூலிக்கிறார்கள்! "நீங்கள்

ஒரு சமண மதத்தை சேர்ந்தவராக இருந்தும் இப்படி செய்கிறீர்கள்" என்று கூறினால், அதற்கு அவர், "நான் உண்மையில் ஒரு சமண மதத்தை சேர்ந்தவன் தான். ஆனால், எனக்கும் ஒரு தொழில் வேண்டும், அல்லவா?" என்று பதிலளிப்பார். 'ஐயா, ஆலோசனை வழங்குவதற்கு கூட கட்டணம் வசூலிப்பதா?', நீங்கள் சமண மதத்தை சார்ந்தவரா? இப்படியெல்லாம் கேட்டு, நீங்கள் கடவுளையும் கூட அவமதிப்பு செய்கிறீர்கள்! நீங்கள் *விதராக்* கடவுளையும் (முழுமையான உலகப் பற்றற்ற பூரண ஆத்ம அனுபவம் அடைந்தவர்கள்) அவமதித்து விடுகிறீர்கள்! ஆலோசனைக்காக ஒரு கட்டணமா?! இது எவ்வளவு பெரிய இரக்கமற்ற செயல்?!

**கேள்வி கேட்பவர்:** அதீத புத்திக்கு *(புத்தி)* கட்டணம் வசூலிக்கப்படுகிறது; அதைத்தானே நீங்கள் குறிப்பிடுகிறீர்கள், அல்லவா!

**தாதாஸ்ரீ:** புத்தியுடன் இருப்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. இருப்பினும், இந்த விபரீத புத்தியானது *(விபரித் புத்தி)*, ஒருவரை மேலும் சார்ந்த நிலைக்குட்படுத்தி விடுகிறது. விபரீதபுத்தி *(விபரித் புத்தி)* என்பது ஒருவருக்கு தீங்கு விளைவிக்ககூடியது! பகவான் புத்தியை எதிர்க்கவில்லை. புத்தி *(சம்யக் புத்தி)* என்பது ஒருவரை, ஆத்மாவை நோக்கி அழைத்துச் செல்லக்கூடிய புத்தியாகவும் இருக்கலாம் என்றே பகவான் கூறுகிறார். ஆயினும், அத்தகைய புத்தி அதிகமாகிவிட்டால், 'யாருடைய பிரச்சனையை நான் தீர்த்து வைப்பது? யாருக்கு நான் உதவி செய்வது? வேலை இல்லாதவர்களுக்கு எல்லாம் வேலை கிடைக்க நான் எப்படி உதவுவது?' என்று ஒருவர் சிந்திக்க ஆரம்பித்து விடுவார்.

## உதவும் பண்பு

**கேள்வி கேட்பவர்:** இப்போது, என்னுடைய கண்ணோட்டத்தில், ஒரு நாய், புறாவைக் கொல்ல முயற்சிக்கும்போது, அதை நான்

காப்பாற்ற முயற்சித்தால், என்னுடைய கண்ணோட்டத்தின்படி அது உதவும் பண்புடன் செயல்பட்டதாக கருதப்படும். ஆனால், இது ஏற்கனவே அறிவியல் சூழ்நிலை ஆதாரங்களின் *(வ்யவஸ்தித்)* விளைவாக தோன்றியது தானே?

**தாதாஸ்ரீ:** உங்களால் எப்பொழுது உதவமுடியும்? புறாவின் *வ்யவஸ்தித்தில்*, அதன் விதி மிஞ்சியிருந்தால் மட்டுமே உங்களால் அவ்வாறு செய்ய முடியும். இல்லையெனில், அது சாத்தியமே இல்லை. ஆயினும்கூட, நீங்கள் உதவும் பண்புடன் தொடர்ந்து இருக்க வேண்டும். அவ்வாறு நீங்கள் செய்யும்போது, நீங்கள் புண்ணிய கர்மாவை மட்டுமே பிணைத்துக் கொள்வீர்கள். இதனால், அடுத்த ஜென்மத்தில் துன்பம் ஏற்படுவதற்கான காரணம் ஏதும் இருக்காது. உங்களால் பணத்தின் மூலம் உதவி செய்ய முடியாவிட்டால், வேறு வகையில் ஏதேனும் உதவி செய்யுங்கள் அல்லது உங்கள் புத்தித்திரனைப் பயன்படுத்தி அவர்களுக்குப் புரிதலை வழங்குங்கள். ஆனால், முடிந்தவரை அவர்களுக்குக் உதவுங்கள்.

## பிறருக்கு உதவுவது, நன்மையை மட்டுமே தரும்

எனவே, இந்த வாழ்க்கையை பிறருக்கு உதவுவதற்காக கழித்தால், நீங்கள் எந்த வகையிலும் நஷ்டப்பட மாட்டீர்கள், எந்த விதமான கஷ்டங்களையும் அனுபவிக்க மாட்டீர்கள்; உங்களுடைய ஆசைகள் அனைத்தும் நிறைவேறும். அதேசமயம், உங்களுடைய ஆசைகளை நிறைவேற்றுவதற்கு மட்டுமே நீங்கள் முயற்சித்துக் கொண்டிருந்தால், அந்த ஆசைகளில் எதுவும் நிறைவேறாது. ஏனென்றால், அப்படி செய்வதினால், இரவில் உங்களை நிம்மதியாக தூங்கவிடாது. பணக்கார தொழிலதிபர்களால் நிம்மதியாக தூங்க முடிவதில்லை. மூன்று, நான்கு நாட்களுக்கு அவர்களால் தொடர்ச்சியாக தூங்க முடிவதில்லை. ஏனென்றால், அவர்கள் மக்களை ஏமாற்றி, அவர்களின் பணத்தை கொள்ளையடிக்கிறார்கள்.

எனவே, உதவும் பண்புடன் இருங்கள். நீங்கள் எங்காவது செல்லும்போது, உங்கள் அக்கம்பக்கத்து வீடுகளில் உள்ளவர்களிடம், "நான் தபால் நிலையத்திற்குச் செல்கிறேன், உங்களுக்கு ஏதேனும் கடிதங்கள் அனுப்பப்பட வேண்டுமா?" என்று கேளுங்கள். நீங்கள் வெளியே செல்லும்போது இவ்வாறு கேட்பதில் ஏதாவது பிரச்சினை உள்ளதா? "நான் உன்னை நம்பவில்லை" என்று யாராவது உங்களிடம் கூறலாம். அப்படி கூறினால் நீங்கள் அவர்களிடம், "சார், என்னை மன்னித்து விடுங்கள்" என்று பதிலளித்து விடுங்கள். இருப்பினும், உங்களை நம்புபவர்களிடமிருந்து, கடிதங்களை எடுத்துச் செல்லுங்கள்.

உண்மையில், நான் உங்களிடம் உரையாடிக்கொண்டு இருக்கும் இந்த உதவும் பண்பு, குழந்தைப் பருவத்தில் என்னிடம் இருந்த ஒரு பண்பாகும். நான் இருபத்தைந்து வயதுடையவனாக இருக்கும் போது, எனது நண்பர்கள் வட்டத்தில் உள்ள அனைவரும் என்னை 'சூப்பர்-ஹ்யுமன்' (தெய்வத்தன்மையுள்ளர்) என்று அழைப்பார்கள்.

மனிதன் என்று யாரை கருதுவது? கொடுக்கல் வாங்கலில் பரஸ்பரமாக உள்ளவர். அதாவது, தனக்கு மகிழ்ச்சி அளிப்பவர்களுக்கு, அவர் மகிழ்ச்சியை அளிப்பார், மற்றும் தன்னை துன்புறுத்துபவர்களை, அவர் துக்கப்படுத்தமாட்டார். இப்படி நடந்துக் கொள்பவர்தான், மனிதநேயம் உள்ளவராக கருதப்படுகிறார்.

பிறரின் மகிழ்ச்சியைப் பறிப்பவர், மிருகத்தனமாகிவிடுகிறார். ஒருவர் தனது உலகியல் தொடர்புகளில் மனிதனாக நடந்து கொள்பவர், பிறருக்கு மகிழ்ச்சியைக் கொடுத்து, தானும் மகிழ்ச்சியைப் பெறுவதன் மூலம் மனித வாழ்க்கையை அடுத்த ஜென்மத்தில் தக்க வைத்துக் கொள்கிறார். அதேசமயம், பிறரின் மகிழ்ச்சிகாக, தன்னுடைய மகிழ்ச்சியை அளிப்பவர், தேவ கதியை அடைவார்; அதாவது 'சூப்பர் ஹ்யுமன்' (தெய்வத்தன்மையுள்ளவர்).

ஒருவர் தன் மகிழ்ச்சியை, துன்பத்தில் இருக்கும் மற்றொருவருக்கு அளிக்கும்போது, அவர் தேவகதியை அடைகிறார்.

## இதில் தற்பெருமை கொள்வது இயல்பானது

**கேள்வி கேட்பவர்:** உதவும் இயல்பு, அஹங்காரத்துடன் தொடர்புக் கொண்டு உள்ளதா?

**தாதாஸ்ரீ:** உதவும் பண்புடன் இருக்கும் ஒருவரின் அஹங்காரம் எப்போதும் சாதாரணமானதாக தான் இருக்கும். இது ஏற்கக்கூடிய அஹங்காரம் தான். அதேசமயம், நீதிமன்றங்களில் பிறருக்கு சேவை செய்ய நூற்றைம்பது ரூபாய் கட்டணம் வசூலிக்கும் ஒருவரின் அஹங்காரம் மிகவும் அதிகமாகவே இருக்கும்.

இவ்வுலகின் இயற்கை நியதி என்னவென்றால், நீங்கள் மற்றவர்களுக்கு உங்களுடைய 'கனிகளை' அளிக்கும்போது, இயற்கையானது உங்களை கவனித்துக் கொள்ளும். இது மிகவும் துல்லியமான அறிவியல் உண்மை ஆகும்! இது மறைமுகமான தர்மம் ஆகும், அதன் பிறகு வருவது நேரடி தர்மம், கடைசியில் வருவது, ஆத்ம தர்மம். உண்மையிலேயே, இதுவே மனித வாழ்வின் மதிப்பாகும்; ஒருவரின் மனம், பேச்சு மற்றும் உடல் ஆகியவை மற்றவர்களுக்கு பயன்பட வேண்டும் என்பதே இதன் சாராம்சம் ஆகும்.

## புதிய இலக்கு இன்றையது, எதிர்வினைகள் கடந்த காலத்தினுடையது

**கேள்வி கேட்பவர்:** அப்படியானால், பிறருக்கு உதவுவதற்காக மட்டுமே ஒருவர் வாழ வேண்டுமா?

**தாதாஸ்ரீ:** ஆம், ஒருவர் பிறருக்கு உதவுவதற்காக மட்டுமே

வாழ வேண்டும். இருப்பினும், நீங்கள் இப்போது உங்கள் வாழ்க்கை பயணத்தின் பாதைகளை உடனடியாக மாற்றினாலும், கடந்த காலத்தின் எதிர்வினைகள் உங்களை பின்தொடரும். அதனால், சில நேரங்களில் நீங்கள் சலிப்படைந்து விடுவீர்கள். ‘நான் இன்னும் இந்த துன்பத்தை தாங்கிக் கொள்ள வேண்டுமே!’ என்ற எண்ணம் உங்களுக்கு தோன்றலாம். இருப்பினும், நீங்கள் சில காலம் அதைத் தாங்க வேண்டியிருக்கும். அந்த குறிப்பிட்ட காலம் கழிந்த பின்னர், உங்களுக்கு எந்த துன்பமும் நேரிடாது. ஆனால் இப்போது, நீங்கள் புதிதாகத் தொடங்குகிறீர்கள். ஆகவே, கடந்தகால எதிர்வினைகள் கண்டிப்பாக வந்தடையும். இதுவரை நீங்கள் செய்த தவறான செயல்களின் விளைவுகள் கண்டிப்பாக உங்களை வந்தடையும் தானே?

## இறுதியாக, ஒருவர் தனக்காக உபகாரம் செய்ய வேண்டும்

நீங்கள் பிறருக்கு உதவி செய்து இருந்தால், பிறருக்கு நன்மை செய்து இருந்தால், மற்றவர்களுக்காகவே வாழ்ந்து இருந்தால், அந்த அளவிற்கு நீங்கள் பயனடைவீர்கள். ஆனால் அது பொருள் சார்ந்த (பௌதீக) பலனாக இருக்கும். அதாவது, நீங்கள் பிறருக்கு உதவி செய்வதன் பலனாக நீங்கள் பெறும் நன்மை, பொருள்சார்ந்ததாக இருக்கும்.

**கேள்வி கேட்பவர்:** பிறரிடம் உதவும் பண்புடன் இருப்பதற்கு பதிலாக, ஒருவர், தனக்காக தான் உதவுபவராக இருந்தால் என்னவாகும்?

**தாதாஸ்ரீ:** அதுவே போதுமானது; உண்மையிலேயே ஒருவர், தனக்காக தான் உபகாரம் செய்வதற்கு தான் எல்லா செயல்களையும் செய்ய வேண்டும். ஒருவர், தனக்காக தான் உதவுபவராக இருந்தால், அவர் முக்தி பெற்றுவிடுவார். ஆனால்,

அதற்காக ஒருவர் தன் சொரூபத்தை (ஆத்மாவை) அறிந்து கொள்ள வேண்டும். தன் சொரூபத்தை அறியும் வரை மற்றவர்களுக்கு உதவ வேண்டும். பிறருக்கு உதவி செய்வதன் மூலம் கிடைக்கும் பலன் பொருள் சார்ந்ததாகத் தான் (பௌதீகமானதாக) இருக்கும். ஒருவரின் சொரூபத்தை அறிய, அவர் 'நான் யார்' என்பதை முதலில் அறிய வேண்டும். உண்மையில், நீங்கள் ஒரு சுத்தாத்மா தான். இது வரை, 'நான் சந்துபாய்' என்பதை மட்டும்தான் நீங்கள் அறிந்து வைத்திருக்கிறீர்கள், அல்லவா? அல்லது வேறு ஏதாவது தெரிந்து வைத்துள்ளீர்களா? உண்மையில் 'நான் யார்' என்றால் இந்த 'சந்துபாய்' தான் என்று கூறுவீர்கள். மேலும் 'நான் அவளுடைய கணவர், நான் அவருடைய தாய் மாமன், நான் அவருடைய சித்தப்பா,' என்று இந்த சுழற்சி தொடரும்! அப்படித்தானே? நீங்கள் தெரிந்து வைத்திருப்பது இதை மட்டும் தான், அல்லவா? இதற்கு மேல் நீங்கள் எதையும் தெரிந்து வைத்துக்கொள்ளவில்லை, அல்லவா?

## மக்களுக்கு சேவை செய்வது சமூகத்தின் தார்மீக கடமை

**கேள்வி கேட்பவர்:** இருப்பினும், உலக தொடர்புகளில், நாம் சிலரைப் பார்த்து பரிதாபப்படுகிறோம், சில மக்களுக்கு சேவை செய்கிறோம். சிலரிடம் உண்டாகும் பற்றுதலினால், 'நான் அவருக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும், அதாவது வேலை வாங்கிக் கொடுக்க வேண்டும், நோய்வாய்ப்பட்ட ஒருவரை மருத்துவமனையில் சேர்க்க வேண்டும்' என்றெல்லாம் சிந்திக்கிறோம்; அப்படியானால், இந்த செயல்கள் அனைத்தும் ஒரு வகையான உலகியல் தார்மீக கடமை *(வ்யவஹார் தர்மா)* தான், அல்லவா?

**தாதாஸ்ரீ:** இவை அனைத்தும் ஒரு நபரின் பொதுவான

கடமைகளாகவே கருதப்படுகின்றன.

**கேள்வி கேட்பவர்:** அப்படியானால், மக்களுக்கு சேவை செய்வது உலகியல் தார்மீக கடமை என்று தான் புரிந்து கொள்ள வேண்டும், அல்லவா? இவை உலகியல் சார்ந்த தார்மீக கடமையாக தான் கருதப்படும், அப்படித்தானே?

**தாதாஸ்ரீ:** இவை அனைத்தும் உலகியல் தார்மீகக் கடமையாகக் கூட கருதப்படாது; இவை உண்மையில் சமூக தார்மீக கடமை *(சமாஜ் தர்மா)* எனப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கு அனுகூலமாக இருக்கும் சேவை *(சேவா)* அந்த சமுதாய மக்களுக்கு மட்டும் அனுகூலமானதாக இருக்கும். ஆனால், அதே சேவையை மற்றொரு சமூகத்திற்கு வழங்கினால், அது அவர்களுக்கு பிரதிகூலமானதாகி விடுகிறது. எனவே, எந்த ஒரு சேவை அனைவருக்கும் ஏற்றுக் கொள்ளும்படி இருக்கிறதோ, அதை உலகியல் தார்மீக கடமை என்று அழைக்கலாம்! இதுவரை, நீங்கள் என்ன சேவைகள் செய்து இருந்தாலும், அது சமூக சேவையாகவே *(சமாஜ் சேவா)* கருதப்படும். ஒவ்வொருவரின் சமூக சேவை வெவ்வேறு வகையானது. ஒவ்வொரு சமுதாயமும் வெவ்வேறு வகையானது, அதைப்போன்று தான் ஒவ்வொரு சமுதாயத்தின் சேவையும் வெவ்வேறு வகையானது.

## பொது சேவை, வீட்டிலிருந்து துவங்குகிறது

**கேள்வி கேட்பவர்:** அப்படியானால், பொது சேவை செய்பவர்கள், எதனால் சேவைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்?

**தாதாஸ்ரீ:** அதற்கு நல்ல எண்ணம்தான் காரணம். 'மக்களுக்கு நான் எப்படி நல்லது செய்வது?' என்ற விருப்பத்தினால். இது நல்ல உணர்வுகள் இருப்பதினால் தான், அல்லவா!

‘மக்கள் தங்களின் துன்பங்களிலிருந்து விடுபடட்டும்’ என்கின்ற பிறரைப் பற்றிய அவர்களின் எண்ணமும் உணர்வும் தான் அவர்களின் சேவைகளுக்குக் காரணம்; இதுவே அவர்களின் சேவைகளின் பின்னணியில் உள்ள நோக்கம் ஆகும். இது மிகவும் உன்னதமான எண்ணம் ஆகும். ஆனால், பொதுச் சேவையில் இருப்பவர்களைப் பொறுத்தவரை, அவர்களிடம் நான் கவனித்தது என்னவென்றால், நாம் அவர்களின் வீடுகளுக்குச் சென்று விசாரித்தால், அவர்களின் குடும்பத்தினர், அவர்கள் மீது ஏராளமான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பார்கள்; ஆகையால், அவற்றை சேவை என்று கருத முடியாது. சேவைகளை வீட்டிலிருந்தே துவங்க வேண்டும். பின்னர், அண்டை வீட்டார்களுக்கு சேவை செய்ய வேண்டும். அதன் பிறகு, மற்ற சேவைகளை செய்ய வேண்டும். மாறாக, பொது சேவை செய்பவர்களின் வீடுகளுக்குச் சென்று நாம் விசாரித்தால், ஏராளமான குற்றச்சாட்டுகள் அவர்களைக் குறித்து கூறப்படுகின்றன. இதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? இதற்காக தான், சேவை செய்வதற்கான முயற்சி வீட்டிலிருந்து துவங்கப்பட வேண்டும், அல்லவா?

**கேள்வி கேட்பவர்:** இந்த விஷயத்தில், இந்த நபருக்கு, தன்னுடைய வீட்டில் தனக்கு எதிராக எந்த குற்றச்சாட்டுகளும் இல்லை என்று கூறுகிறார்.

**தாதாஶ்ரீ:** அப்படியானால், அவருடைய சேவை உண்மையானது என்று அர்த்தம்.

## நல்ல எண்ணத்துடன் பொதுசேவை செய்யுங்கள்

**கேள்வி கேட்பவர்:** பொது சேவை செய்யும் போது, அந்த மக்களுக்குள் நான் கடவுளை தரிசனம் (பக்தியுடன் தரிசிப்பது) செய்திருந்தால், அது நல்ல பலனைத் தரும், அல்லவா?

**தாதாஸ்ரீ:** ஒருவர் மக்களுக்குள் கடவுளை தரிசனம் செய்திருந்தால், அவரால் பொது சேவையில் ஈடுபட முடியாது. ஏனென்றால், கடவுளை தரிசனம் செய்த பிறகு, கடவுளை விட்டு யார் விலகுவார்கள்? உண்மையில், பொதுமக்களுக்குச் சேவை செய்வதற்கான காரணம் கடவுளைக் கண்டறிவதற்காக தான். பொதுமக்களுக்காக செய்யும் சேவையை முழு மனதோடு நாம் செய்ய வேண்டும்; அது இதயப்பூர்வமானதாக இருந்தால், எல்லா இடங்களையும் சென்றடையும். பொதுச் சேவையும், விளம்பரமும் *(பிரக்யாதி)* ஒன்று சேர்ந்தால், அது அந்த நபரை சிரமத்தில் ஆழ்த்திவிடும். புகழின்றி மக்கள் சேவை புரிந்தால், அதுவே உண்மையான ஒப்பற்ற சேவையாகும். உண்மையில் புகழ் கிடைக்கும் (மற்றவர்களின் மூலமாக), இருப்பினும், ஒருவருக்கு புகழின் மீது எந்த ஆசையும் இல்லாமல் இருக்க வேண்டும்.

பொதுமக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்று இப்போதுள்ள மக்களுக்கு இருப்பது இல்லை. உண்மையில், புகழுக்கான பேராசை, மரியாதையைப் பெறுவதற்கான பேராசை, என எல்லா வகையான பேராசைகளும் அவர்களை சேவைகளைச் செய்யத் தூண்டுகின்றன. பொதுமக்களுக்கு சேவை செய்யும் நபர்கள் உண்மையில் எப்படி இருக்க வேண்டும்? அவர்கள் *அபரிக்ரஹி* (உடைமைகளை சேகரிக்கும் பேராசையில் இருந்து விடுபட்டவர்கள்) மக்களாக இருத்தல் வேண்டும். ஆனால், இங்கே எல்லோரும், 'இப்படி சேவை செய்து, படிப்படியாக ஒரு நாள் நான் மந்திரி ஆகிவிடுவேன்' என்று நினைத்துக் கொண்டு, நற்பெயர் பெறுவதற்காக செய்கிறார்கள். இத்தகைய (உள்நோக்கத்துடன்), அவர்கள் மக்களுக்கு சேவை செய்கிறார்கள். அவர்களின் இந்த எண்ணம் தவறானதாகும். எனவே, இந்த புறசிக்கல்கள் (பேராசை), தேவையற்ற பரிகிரகங்கள் (உடமைகள்), ஆகியவைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்போது, எல்லாம் முறையாக செயல்படும். அதற்குப் பதிலாக, ஒருவர் ஒருபக்கம், பரிகிரகியாகி, சம்பூர்ண பரிகிரகியாக (அனைத்து உடைமைகளுடன்) இருக்க வேண்டும்

என்று விரும்புகிறார், மறுபக்கம் அவர் பொதுமக்களுக்குச் சேவை செய்ய விரும்புகிறார்; இவை இரண்டும் எப்படி சாத்தியமாகும்?

**கேள்வி கேட்பவர்:** தற்போது, நான் மனித இனத்திற்கு சேவை செய்து வருகிறேன். நான் வீடு வீடாக சென்று நன்கொடை சேகரித்து, அதை ஏழைகளுக்கு கொடுக்கிறேன். தற்போது என்னால் முடிந்த இந்த சேவையை நான் செய்து வருகிறேன்.

**தாதாஸ்ரீ:** அவை அனைத்தும் உங்கள் (கர்ம) கணக்கில் வரவு வைக்கப்படும். நீங்கள் எதைக் கொடுக்கிறீர்களோ... இல்லை, இல்லை, நீங்கள் இடைத்தரகராக இருந்து எதைச் செய்தாலும், அதன் கூட்டுத்தொகை கணக்கிடப்பட்டு, பதினொன்றால் அந்த தொகை பெருக்கப்படும். பின்னர், உங்களுக்கு கிடைக்க வேண்டிய 'கமிஷன்' உங்களுக்கு கிடைக்கும். அடுத்த ஜென்மத்தில் உங்களுக்கு இந்த 'கமிஷன்' கிடைத்து, அதன் மூலம் நீங்கள் நிம்மதி அடைவீர்கள். நீங்கள் இந்த நற்பணியைச் செய்வதால், தற்போதும் உங்களுக்கு நிம்மதி கிடைக்கும் மற்றும் எதிர்காலத்திலும் நிம்மதி உங்களுக்கு கிடைக்கும். இது மிகவும் சிறந்த ஒரு செயல்.

மற்றபடி, சேவை எனப்படுவது எதுவென்றால், நீங்கள் ஒரு வேலை செய்கிறீர்கள் என்றால் அது எனக்கு தெரியாதவாறு இருக்க வேண்டும். அதுவே சேவை *(சேவா)* எனப்படுகிறது. உங்களுடைய சேவை அடக்கமான சேவையாக இருக்க வேண்டும். உங்களுடைய சேவை (மற்றவர்கள்) தெரிந்துக்கொண்டால், அது சேவை எனக் கருதப்படாது.

ஒருமுறை, நான் சூரத்தில் உள்ள ஒரு கிராமத்திற்குச் சென்றிருந்தேன். அங்கு ஒரு நபர் என்னிடம் வந்து, "நான் சமூக சேவை செய்ய விரும்புகிறேன்" என்றார். நான் அவரிடம், "நீங்கள் என்ன சமூக சேவை செய்வீர்கள்?" என்று கேட்டேன். அதற்கு

அவர் என்னிடம், “நான் பணக்கார தொழிலதிபர்களிடமிருந்து பணத்தை சேகரித்து, அதை ஏழை மக்களுக்கு கொடுப்பேன்” என்றார். உடனே, நான் அவரிடம், “அந்த பணத்தை ஏழைகளுக்கு கொடுத்த பிறகு, அவர்கள் அதை எப்படி செலவிடுகிறார்கள் என்பதை நீங்கள் கண்டறிவீர்களா?” என்று கேட்டேன். அதற்கு அவர், “நான் ஏன் அதை பார்க்க வேண்டும்?” என்று கேட்டார். பின்னர் நான் அவரிடம், “நண்பரே, நான் உங்களுக்கு ஒரு யோசனை கூறுகிறேன், அதன்படிச் செய்யுங்கள் என்றேன். தொழிலதிபர்களிடம் வசூலித்த பணத்தில் ஏழையான அந்த நபருக்கு நூறு ரூபாய் விலையுள்ள காய்கறி வண்டியை வாங்கிக் கொடுங்கள். இரண்டு டயர்களைக் கொண்ட கை வண்டிகளின் விலை சுமார் நூறு, நூற்றைம்பது அல்லது இருநூறு ரூபாய் இருக்கும்; அப்படி ஒரு காய்கறி வண்டியை அவருக்கு வாங்கிக் கொடுங்கள். பிறகு அவரிடம் இன்னொரு ஐம்பது ரூபாயைக் கொடுத்து, ‘நீ காய்கறிகளை வாங்கி விற்றுவிட்டு, தினமும் மாலையில் எனக்கு அசலில் ஒரு தொகையைத் திருப்பிக் கொடு. லாபம் உன்னுடையது, வண்டிக்காக தினமும் இவ்வளவு பணத்தை எனக்குக் கொடு’” என்று விளக்கினேன். அதற்கு அவர், “எனக்கு இந்த யோசனை மிகவும் பிடித்திருக்கிறது. நீங்கள் மறுமுறை சூரத்துக்கு வருவதற்கு முன், நான் ஐம்பது முதல் நூறு பேரை திரட்டி வைக்கிறேன்” என்று கூறினார். எனவே, தற்போது இதுபோன்று செய்யுங்கள். ஏழ்மையில் இருக்கும் இவர்களுக்கெல்லாம் காய்கறி வண்டி வாங்கிக் கொடுங்கள். அவர்களுக்கு பெரிய தொழில் ஆரம்பித்து கொடுக்க வேண்டும் என்ற அவசியம் இருக்கிறதா என்ன? அந்த ஏழைக்கு ஒரு வண்டி வாங்கிக் கொடுத்தால், அவர் மாலைக்குள் இருபது ரூபாய் சம்பாதித்திருப்பார். இதை பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? நீங்கள் அவருக்காக இதை செய்தால், நீங்கள் ஒரு புத்திசாலியான ஜெயின் எனப்படுவீர்கள், அல்லவா? இப்படித்தான், ஒரு அகற்பத்தி எரிந்துக் கொண்டு இருக்கும் போது கூட, நறுமணத்தை கொடுத்துக் கொண்டே

எரிகிறது, அல்லவா? அது அறை முழுவதிலும் நறுமணத்தை விட்டுச் செல்கிறது, அல்லவா? அப்படியானால், நம்மால் 'நறுமணத்தை' ஏற்படுத்த முடியாதா?

இதை நம்மால் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? நான் இருபத்தைந்து, முப்பது வயதிலும் கூட எனக்கு அதிகப்படியான அஹங்காரத்துடன் இருந்தேன், அதுவும் விசித்திரமான அஹங்காரத்துடன் இருந்தேன். ஒருவர் என்னைச் சந்தித்தார் என்று வைத்துக் கொள்வோம். அவர் என் மூலம் பயனடையவில்லை என்றால், அவர் என்னைச் சந்தித்ததில் எந்த அர்த்தமும் இல்லை! இவ்வாறு சிந்திப்பதால், ஒவ்வொரு மனிதனும் என்னிடமிருந்து பயனடைந்தனர். அவர்கள் என்னைச் சந்தித்து எந்தப் பலனையும் பெறவில்லை என்றால், அந்த சந்திப்பில் என்ன அர்த்தம் உள்ளது? மாமரம் சொல்வது என்னவென்றால், 'மாம்பழ சீசனில், மாம்பழம் பறிக்க ஒருவர் வந்து, ஆனால் அவருக்கு என் மூலம் எந்த பலனும் கிடைக்கவில்லை என்றால், நான் நிச்சயமாக ஒரு மாமரம் இல்லை'. சிறிய மாம்பழமாக இருந்தாலும் சரி; நீங்கள் எதை விரும்புகிறீர்களோ அதை, குறைந்தபட்சம் அதைப் பெறுவதன் மூலம் நீங்கள் பயனடைகிறீர்கள் தானே! மாமரம் எந்த பலனையும் தனக்கென்று எடுத்துக் கொள்ளாது. இதை நடைமுறைப்படுத்தும் எண்ணம் நமக்கு இருக்க வேண்டும், அல்லவா? மனிதகுலம் இப்படி இருப்பதை எப்படி நம்மால் ஏற்றுக்கொள்ள முடியும்? இருப்பினும், இந்த புரிதல் சரியான முறையில் போதிக்கப்பட்டால், மக்களால் இதை புரிந்து கொள்ள முடியும். உண்மையில், இது ஒரு நபரின் புரிதலுக்கு வந்து, அவர் அதைப் பின்பற்றி இருந்தால், எல்லாம் முன்னேற்றத்தை நோக்கி சென்றிருக்கும். இதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**கேள்வி கேட்பவர்:** ஆம், நீங்கள் சொல்வது போல், ஒவ்வொரு இருப்பிடங்களிலும் மகாஜனங்கள் (மிகுந்த மரியாதைக்குரிய சமூகத்தின் தலைவர்கள்) என்று ஒரு அமைப்பு முன்னர் இருந்தது.

**தாதாஶ்ரீ:** ஆனால் இன்று, அவர்கள் கூட சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர், அல்லவா! எனவே, யாருடைய தவறும் இல்லை. இப்போது, எது நடக்க வேண்டுமோ அது நடந்து முடிந்துவிட்டது. ஆனால், இந்த சிந்தனையை ஒருவர் மேம்படுத்தினால், எல்லா செயல்களையும் மேம்படுத்த முடியும். மேலும், சீர்குழைந்து போனதை மேம்படுத்துவதை தான் தர்மம் எனப்படுகிறது. மேன்மைடைந்த ஒன்றை செம்மைப்படுத்துவதற்கு அனைவரும் எப்போதும் தயாராக இருப்பார்கள். ஆனால், சீர்குழைந்து போன ஒன்றை மேம்படுத்துவது தான் தர்மம் எனப்படும்.

## மக்கள் சேவையே மகேசன் சேவை

**கேள்வி கேட்பவர்:** மனித இனத்திற்கு செய்யும் சேவை உண்மையில் கடவுளுக்கு செய்யும் சேவை, அல்லவா!

**தாதாஶ்ரீ:** இல்லை, அது கடவுளுக்குச் செய்யும் சேவை இல்லை. ஒரு நபர் எப்போது மற்றவர்களுக்கு உதவி செய்கிறார்? அவர், தனக்குள் அந்த துக்கத்தை அனுபவிக்கும்போதுதான். ஒரு நபருக்காக நீங்கள் இரக்கப்படும்போதெல்லாம் *(தயா)*, அவர்களின் வருந்தும் நிலையைப் பார்த்து உங்களுக்குள் துக்கம் ஏற்படுகிறது. உங்களுடைய துக்கத்திலிருந்து விடுபடுவதற்காகவே இந்த சேவை எல்லாம் நீங்கள் செய்கிறீர்கள். எனவே, இந்த சேவைகள் அனைத்தும் ஒருவரின் தனிப்பட்ட துக்கத்தை குறைப்பதற்காக தான் செய்யப்படுகிறது. அதிக இரக்கப்படுபவராக இருக்கும் ஒரு நபர், “நான் பரிதாபப்பட்டு இவர்களுக்கு இதைக் கொடுத்தேன், அவர்களுக்கு அதைக் கொடுத்தேன்” என்று கூறுவார், அல்லவா! உங்களுடைய மகிழ்ச்சியின்மையை போக்குவதற்காகவே, நீங்கள் இவற்றையெல்லாம் மக்களுக்கு அளிக்கிறீர்கள். இந்த கருத்தை உங்களால் புரிந்து கொள்ள முடிகிறதா? இது மிகவும் நுட்பமான கருத்தாகும். இது மேலோட்டமான ஒரு கருத்து அல்ல. ஒருவர் தன்னுடைய துக்கத்தை குறைப்பதற்காக பிறருக்கு வழங்குகிறார்.

இருப்பினும், இது ஒரு நல்ல செயல் தான். பிறருக்குக் கொடுப்பதால், பதிலுக்கு உங்களுக்கு தேவையானதை நீங்கள் பெறுவீர்கள்.

**கேள்வி கேட்பவர்:** ஆனால், பொதுமக்களுக்கு செய்யும் சேவை, கடவுளுக்குச் செய்யும் சேவையாகக் கருதப்படுகிறதா? அல்லது கண்ணுக்கு புலப்படாத *(அமூர்த்த)* கடவுளுக்கு வடிவம் கொடுத்து வழிபடுவதையா?

**தாதாஸ்ரீ:** பொது மக்களுக்குச் சேவை செய்வதன் மூலம், உலக வாழ்க்கையின் அனைத்து இன்பங்களையும், பொருள்சார்ந்த சுகங்களையும் நீங்கள் பெறுவீர்கள். மேலும், அது உங்களை படிப்படியாக மோட்சத்தை நோக்கி அழைத்துச் செல்லும். ஆனால், எல்லா பிறவிகளிலும் இப்படி நடப்பதில்லை; இத்தகைய சூழ்நிலைகள் ஏதேனும் ஒரு அரிய பிறவியில் தான் அமைகின்றன. எல்லா பிறவிகளிலும் நிகழுவது இல்லை. எனவே தான், இது முற்றிலும் நிறுவப்பட்ட ஒரு கொள்கையானது அல்ல.

## மோட்சம் அடைவதற்கான நிலைகள் வேறுபட்டவை

*சமாஜ் கல்யாண்* (சமூக நலன்) செய்வதை *ஜகத் கல்யாண்* (உலக நலனுக்கு மற்றும் மோட்சம் பெறுவதற்காக செய்யும் சேவை) செய்ததாக கருத முடியாது. அது உண்மையில் ஒரு உலகியல் நோக்கமாகும். இவை அனைத்தும் சமூக நலனாகவே கருதப்படுகின்றன. மக்கள் தங்களால் இயன்ற அளவு இதைச் செய்கிறார்கள். இந்த சேவைகளெல்லாம் மொத்தமான கருத்தியல் ஆகும். உலக நலனுக்காக மற்றும் மோட்சத்திற்காக மேற்கொள்ளப்படும் சேவை என்பது நுட்பமான, மிகவும் நுட்பமான மற்றும் நுண்ணியமான ஒரு கருத்தியல் ஆகும்! இவை *(ஜகத் கல்யாணின்)* நுண்ணியமான நோக்கங்கள் அல்லது அந்த நோக்கங்களின் சுவடுகள் மட்டுமே ஆகும்.

## சமூக சேவை செய்வது பிரகிருதியின் இயற்கையான இயல்பு

சமூக சேவையானது, ஒருவர் தன்னை முழுமையாக அர்ப்பணித்து, சேவை செய்வதில் உறுதிக்கொண்ட பின்னரே செய்யப்படுகிறது. எனவே, சமூக சேவையில் ஈடுபடும் ஒரு நபர் தனது வீட்டில் அதிக கவனம் செலுத்தமாட்டார். மேலும், அவர் மற்றவர்களுக்குச் சேவை செய்வதில் மட்டுமே கவனம் செலுத்துவார்; இதுவே சமூக சேவை என்று குறிப்பிடப்படுகிறது. சமூக சேவையைத் தவிர மற்ற அனைத்தும் ஒரு நபரின் உள் உணர்வுகளாகவே கருதப்படுகிறது, அத்தகைய உணர்வுகள் ஒருவருக்குள் தொடர்ந்து எழுந்து கொண்டே இருக்கின்றன. யாரோ ஒருவர் மீது நாம் பரிதாபம் கொள்ளலாம், மற்றொருவர் மீது அனுதாபம் காட்டலாம். இவை அனைத்தும் உண்மையில் ஒருவரின் *பிரகிருதியில்* (உள்ளார்ந்த சிறப்பியல்பு கொண்ட சார்ந்த ஆத்மா) கடந்த ஜென்மத்திலிருந்து கொண்டு வந்த விஷயங்கள் ஆகும். ஆனால், இறுதியில் இவை அனைத்தும் சார்ந்த ஆத்மாவின் செயல்பாடுகளே *(பிரகிருதி தர்மா)* ஆகும். சமூக சேவையும் கூட *பிரகிருதியின்* செயல்பாடே ஆகும். அது சார்ந்த ஆத்மாவின் *(பிரகிருதி ஸ்வபாவ்)* உள்ளார்ந்த இயல்பு எனப்படும், அதாவது ‘இவரின் சுபாவம் இப்படி, அந்த நபரின் சுபாவம் அப்படி’ என்று. ஒருவருக்கு பிறரை துக்கப்படுத்தும் சுபாவம் இருக்கும், மற்றொருவருக்கு மகிழ்ச்சி அளிக்கும் சுபாவம் இருக்கும். இந்த இரண்டு சுபாவங்களும் *பிரகிருதி* சுபாவம் எனப்படும், ஆத்ம சுபாவம் *(ஆத்ம ஸ்வபாவ்)* அல்ல. ஒருவர் எப்படிப்பட்ட (கர்ம) சரக்கு இருப்பை *பிரகிருதியில்* நிரப்பி இருக்கிறாரோ, அப்படிப்பட்ட சரக்கு இருப்பு தான் அவரிடமிருந்து வெளிப்படும்.

## சேவை செய்வது மற்றும் தீங்கு விளைவிப்பது அனாத்மாவின் உள்ளார்ந்த சுபாவம் *(பிரகிருதி)*

நீங்கள் ஆற்றும் சேவையானது *பிரகிருதியின்* சுபாவம் ஆகும், மற்றும் ஒரு மனிதர் தீங்கு விளைவிப்பது என்பதும், *பிரகிருதியின்* சுபாவமே ஆகும். இதில் உங்கள் தரப்பிலிருந்து எந்த முயற்சியும் இல்லை, அதுபோன்று அந்த மனிதரின் தரப்பிலிருந்தும் எந்த முயற்சியும் இல்லை; இருப்பினும், ஒருவர் தன் மனதளவில், 'நான் இதைச் செய்கிறேன்' என்று நம்பிக்கொள்கிறார். இப்போ, 'நான் தான் செய்கிறேன்' என்று நம்புவது தான் மாயை *(ப்ராந்த்தி)*. இங்கு நீங்கள் ஆத்ம ஞானம் *(ஆத்ம ஞான்)* பெற்ற பின்னரும், நிச்சயமாக பிறருக்கு சேவை செய்வீர்கள். ஏனென்றால், அத்தகைய *பிரகிருதியை* நீங்கள் கொண்டிருக்கிறீர்கள். ஆனால், அந்த சேவை தூய்மையான *(ஷுத்த)* சேவையாக இருக்கும்; தற்போது சுப *(ஷுப்)* சேவை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சுப சேவை என்பதும் கர்ம பிணைப்பை உண்டாக்கும் சேவையே; ஒரு தங்கத்தினாலான கைவிலங்காக இருந்தாலும் கூட நிச்சயம் பிணைப்பே, அல்லவா! *ஆத்ம ஞானத்தை* அடைந்த பிறகு, மற்றவர்களுக்கு என்ன நேர்ந்தாலும், நீங்களும் துக்கப்படமாட்டீர்கள் மேலும் அவர்களின் துக்கமும் நீங்கிவிடும், பிறகு உங்களுக்குள் கருணை *(கருணா)* தோன்றும். தற்போது, நீங்கள் ஒருவர் மீது பரிதாபம் கொண்டு, 'அவர் என்னென்ன துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருப்பார்? அவருடைய மனநிலை எப்படி இருக்கும்?' என்று நினைக்கிறீர்கள். நீங்கள் அவர் மீது பரிதாபப்படுகிறீர்கள். அத்தகைய பரிதாபதன்மை எப்போதும் உங்களுக்கு துக்கத்தை தான் அளிக்கும். எங்கே பரிதாபம் இருக்கிறதோ, அங்கே எப்போதும் அஹங்காரம் இருக்கும். பரிதாப உணர்வு இல்லாமல், *பிரகிருதி* ஒருபோதும் சேவை செய்யாது; இருப்பினும், *ஆத்ம ஞானத்தை* அடைந்த பிறகு, நீங்கள் கருணை உணர்வுடன் இருப்பீர்கள்.

பிறருக்கு சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தின் விளைவாக கிடைப்பது, உலக இன்பமாகும்; ஒருவருக்கு தீங்கு செய்யும் எண்ணத்தின் விளைவாக கிடைப்பது துன்பம் ஆகும். மற்றவர்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தினால், ஒருவர் தனது சொரூபத்தை *(ஹு* அதாவது 'நான்'*)* அடைய முடியாது. இருப்பினும், ஒருவர் தனது சொரூபத்தை அடையாத வரை, பரோபகார சுபாவத்துடன் இருக்க வேண்டும்.

## ஒரு உண்மையான சமூக சேவகன்

நீங்கள் யாருக்கு உதவி செய்கிறீர்கள்?

**கேள்வி கேட்பவர்:** நான் இந்த சமூகத்திற்கு சேவை செய்ய நிறைய நேரம் செலவிடுகிறேன்.

**தாதாஸ்ரீ:** உண்மையில், சமூக சேவைகளில் பல்வேறு வகைகள் உள்ளன. 'நான் ஒரு சமூக சேவகன்' என்று சிறிதளவிலும் விழிப்புணர்வு *(பான்)* இல்லாமல் செய்யும் சேவைதான், உண்மையான சமூக சேவை ஆகும்.

**கேள்வி கேட்பவர்:** இது உண்மையான கருத்து.

**தாதாஸ்ரீ:** இல்லையெனில், ஒவ்வொரு பகுதியிலும் இரண்டு முதல் நான்கு சமூக சேவையாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வெள்ளைத் தொப்பிகளை அணிந்துகொண்டு, 'நான் ஒரு சமூக சேவகன்' என்ற எண்ணத்துடன் சுற்றிக்கொண்டு இருக்கிறார்கள். இருப்பினும், அவருக்கு அந்த விழிப்புணர்வு (நான் ஒரு சமூக சேவகன் என்கிறது) இல்லாமல் போகும் போது தான், அவர் உண்மையான சமூக சேவகர் ஆகிறார்!

**கேள்வி கேட்பவர்:** நான் சில நல்ல காரியங்களை செய்யும்போது, 'இதை நான்தான் செய்தேன்!' என்ற அஹங்காரம்

எழுகிறது.

**தாதாஸ்ரீ:** அது தவிர்க்க முடியாமல் தோன்றும்.

**கேள்வி கேட்பவர்:** அப்படியானால், அதை மறக்க நான் என்ன செய்ய வேண்டும்?

**தாதாஸ்ரீ:** 'நான் ஒரு சமூக சேவகன்' என்ற இந்த அஹங்காரம் உங்களுக்குள் ஒருபோதும் எழக்கூடாது. நீங்கள் ஏதாவது நல்ல செயலைச் செய்து, அதற்கு அஹங்காரம் எழுந்ததென்றால், நீங்கள் எந்த பகவானை அல்லது கடவுளை நம்புகிறீர்களோ, அந்த கடவுளிடம், 'கடவுளே! நான் அஹங்காரம் கொள்ள விரும்பவில்லை. இருப்பினும், ஏற்பட்டுவிடுகிறது, அதற்கு மன்னித்துவிடுங்கள்!' என்று உடனடியாகச் சொல்ல வேண்டும். இதை மட்டும் செய்யவும். உங்களால் இதைச் செய்ய முடியுமா?

**கேள்வி கேட்பவர்:** முடியும்.

**தாதாஸ்ரீ:** அப்படியானால், இதை மட்டும் செய்யவும்!

சமூக சேவையின் அர்த்தம் என்ன? அது மிகப்பெரிய அளவில் 'எனது' ('எனது - தன்மையை') என்ற உணர்வை அழித்துவிடுகிறது. ஒருவரின் 'எனது' என்ற உணர்வு முற்றிலுமாக அழிந்து விட்டால், அவரே தான் பரமாத்மா *(பரமாத்மா)*! பிறகு அவர் பேரானந்த நிலையில் திளைப்பார்!

## சேவையில் அஹங்காரம்

**கேள்வி கேட்பவர்:** அப்படியானால், இந்த உலகிற்கு நாம் செய்ய வேண்டிய சேவைகள் என்று எதுவும் இல்லையா?

**தாதாஸ்ரீ:** முதலாவதாக 'நீங்கள்' எதுவும் செய்யவே

கூடாது; அது வெறுமனே அஹங்காரம் தான் எழுந்துள்ளது. மனிதர்கள் மட்டுமே 'நான் தான் செய்கிறேன்' என்ற அஹங்காரம் கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

**கேள்வி கேட்பவர்:** இந்த பெண்மணி ஒரு மருத்துவர். ஒரு ஏழை நோயாளி அவரிடம் சிகிச்சைக்காக வருகிறார், அவர் மீது இந்த மருத்துவருக்கு அனுதாபம் ஏற்படுகிறது, அவர் அந்த ஏழை நோயாளிக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கிறார். நீங்கள் சொல்வதை அடிப்படையாகக் கொண்டால், அனுதாபம் கொள்ள வேண்டுமா என்ற கேள்விக்கே இடமில்லாமல் போகிறதே, அல்லவா?

**தாதாஸ்ரீ:** அப்படி அனுதாபப்படுவதும் இயற்கையானது தான். ஆனாலும், 'நான் மிகவும் அனுதாபப்பட்டேன்!' என்ற அஹங்காரம் கொள்கிறார். ஒருவர் இப்படிப்பட்ட அஹங்காரத்துடன் இல்லாமல் இருந்தால், எந்த பிரச்சனையும் இல்லை. இருப்பினும், ஒருவரால் அஹங்காரம் கொள்ளாமல் இருக்க முடியாது, அல்லவா!

## சேவையில் அர்ப்பணிப்பு

**கேள்வி கேட்பவர்:** இந்த உலக மக்களுக்கு சேவை செய்யும் போது, கடவுளுக்கு சேவை செய்கிறோம் என்ற உள்நோக்கத்தை ஒருவர் கொண்டிருக்க வேண்டும் என்பது ஒருவரின் கடமை அல்லவா?

**தாதாஸ்ரீ:** ஆமாம்; அதற்கு பலனாக கிடைப்பது புண்ணிய கர்மா, மோட்சம் கிடைக்காது.

**கேள்வி கேட்பவர்:** அதற்கான வெகுமதியை, வெளிப்பட்ட பரமாத்மாவிற்கு ஒப்படைக்கப்பட்டாலும், மோட்சம் கிடைக்காதா?

**தாதாஸ்ரீ:** ஒருவரால் அந்த பலனை (வெகுமதி) அப்படியே

ஒப்படைத்துவிட முடியாது.

**கேள்வி கேட்பவர்:** நாம் மனதளவில் சமர்ப்பித்துவிட்டால் என்னவாகும்?

**தாதாஸ்ரீ:** நாம் சமர்ப்பித்தாலும், அந்த பலனை யாரும் ஏற்றுக்கொள்ளவும் மாட்டார்கள், மேலும் யாரும் அப்படி ஒப்படைக்கவும் மாட்டார்கள். இவை எல்லாமே வெற்றுப் பேச்சுகள் தான். *ஞானி புருஷ்* சொரூபத்தை பற்றிய ஞானத்தை வழங்கும் தருணத்திலிருந்து, உண்மையான தர்மம் தானாகவே செயல்பட ஆரம்பித்துவிடும். அதேசமயம், *வ்யவஹார்* (உலகியல் நடைமுறை) *தர்மம்* என்பது நீங்களாக செய்ய வேண்டிய ஒன்று, அதை நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

## உலக வாழ்க்கையின் முன்னேற்றம், துணை விளைபொருளாக கிடைக்கும்

**கேள்வி கேட்பவர்:** இந்த உலகில் முன்னேற்றம் அடைவதற்கான ஆசை மற்றும் அதற்கான முயற்சிகளை மேற்கொள்வது உண்மையில் ஆன்மீக முன்னேற்றத்திற்கு தீங்கு விளைவிக்குமா? அப்படி தீங்கு விளைவிக்குமானால், எந்த வகையில் தீங்கு விளைவிக்கும்? தீங்கு விளைவிக்காது எனில், எந்த வகையில் விளைவிக்காது?

**தாதாஸ்ரீ:** நீங்கள் உலகில் முன்னேற்றம் அடைய விரும்பினால், நீங்கள் அதற்கான ஒரு திசையில் செல்ல வேண்டும். நீங்கள் ஆன்மீகத்தில் வெற்றி பெற விரும்பினால், அதற்கு நீங்கள் வேறு ஒரு திசையில் செல்ல வேண்டும். எனவே, ஒரு திசையில் செல்வதற்கு பதிலாக, வேறு ஒரு திசையில் சென்றால், அது உண்மையில் தீங்கு விளைவிக்கும், அல்லவா?

**கேள்வி கேட்பவர்:** ஆம், அது தீங்கு விளைவிப்பதாகவே கருதப்படும்!

**தாதாஸ்ரீ:** இதன் அர்த்தம், அது முற்றிலும் தீங்கு விளைவிக்கக்கூடியது. ஆன்மீகம் ஒரு திசையில் இருந்தால், உலகியல் முன்னேற்றம் அதன் எதிர் திசையில் இருக்கிறது.

**கேள்வி கேட்பவர்:** அப்படியானால், ஒருவருக்கு உலகியல் முன்னேற்றம் இல்லையென்றால் எப்படி முடியும்?

**தாதாஸ்ரீ:** இந்த உலகில் யாராவது உண்மையிலேயே உலகியல் முன்னேற்றத்தை முழுமையாக அடைந்திருக்கிறார்களா? எல்லோரும் உலகியல் முன்னேற்றத்திற்காக போராடுகிறார்கள். யாரேனும் அதை உண்மையில் அடைந்திருக்கிறார்களா?

**கேள்வி கேட்பவர்:** சிலருக்கு மட்டுமே அது சாத்தியமாகிறது. எல்லோருக்கும் அது கிடைப்பதில்லை.

**தாதாஸ்ரீ:** இது ஒருவருடைய கட்டுப்பாட்டில் *(சத்தா)* இருக்கும் விஷயம் அல்ல. நம் கட்டுப்பாட்டில் இல்லாத ஒன்றுக்காக, தேவையில்லாமல் கூச்சலிடுவதில் என்ன பயன்? அதில் எந்த அர்த்தமும் இல்லை!

**கேள்வி கேட்பவர்:** ஒரு மனிதருக்கு, ஏதேனும் ஆசை *(காம்னா)* இருக்கும் வரை, அவரால் எப்படி ஆன்மீகத்தை நோக்கிச் செல்ல முடியும்?

**தாதாஸ்ரீ:** ஆம், ஆசை இருப்பதில் எந்த தவறும் இல்லை. ஆசை இருக்கலாம். ஆனால், அதை கட்டுப்படுத்துவது உங்கள் கைகளில் இல்லை.

**கேள்வி கேட்பவர்:** அந்த ஆசை எப்படி முடிவுக்கு வரும்?

**தாதாஸ்ரீ:** ஆசையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான எல்லா சூழ்நிலைகளும் அமையும். அதை நினைத்து, நீங்கள் அதிகம் கவலைப்படக்கூடாது. நீங்கள் ஆன்மீகத்தை தொடர்ந்து கொண்டே இருக்க வேண்டும். இந்த உலகியல் முன்னேற்றம் என்பது ஒரு துணை விளைபொருளே ஆகும். ஆன்மீக 'தயாரிப்பை' நீங்கள் தொடங்கும்போது, அதாவது நீங்கள் இந்தத் திசையில் சென்று ஆன்மீக 'தயாரிப்பை' துவங்கும்போது, உலகியல் முன்னேற்றம் உங்களுக்கு ஒரு துணை விளைபொருளாக, இலவசமாக கிடைக்கும்.

**கேள்வி கேட்பவர்:** ஒருவர் ஆன்மீகப் பாதையில் தொடர விரும்பினால், அவருக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்? நாம் அந்த பாதையில் எப்படி தொடர வேண்டும்?

**தாதாஸ்ரீ:** இல்லை, ஆனால் நீங்கள் முதலில் புரிந்து கொண்டீர்களா, அதாவது 'தயாரிப்பு' ஆன்மீகமானதாக இருந்தால், உலகியல் முன்னேற்றம் என்பது துணை விளைபொருளாக கிடைக்கும் என்று; இதை உங்களால் புரிந்துகொள்ள முடிகிறதா?

**கேள்வி கேட்பவர்:** நீங்கள் சொல்வதை நான் நம்புகிறேன். ஆனால், என்னால் இதை சரியாக புரிந்து கொள்ள முடியவில்லை.

**தாதாஸ்ரீ:** நீங்கள் இதை நம்பினாலும் கூட, இந்த உலக இன்பங்களெல்லாம் ஒரு துணை விளைபொருட்கள் தான். துணை விளைபொருட்கள் என்பது இலவசமாக கிடைக்கும் பொருட்கள் ஆகும். இவ்வுலகின் தற்காலிக இன்பங்கள் அனைத்தும் இலவசமாக பெறப்படுவது தான். ஆன்மீக மகிழ்ச்சியை பெறுவதற்காக செய்யும் முயற்சியில், இதை துணை விளைபொருளாக பெறப்படுகிறது.

**கேள்வி கேட்பவர்:** ஆன்மீகத்தில் நாட்டம் இல்லாத பலரை நான் பார்த்து இருக்கிறேன். ஆனால், அவர்கள் உலக

வாழ்க்கையில் மிகவும் வளம் பெற்று இருக்கிறார்கள், மேலும் அதில் அவர்கள் மகிழ்ச்சியாகவும் இருக்கிறார்கள்.

**தாதாஸ்ரீ:** ஆம், அவர்கள் ஆன்மீக நாட்டம் உடையவர்களாக இல்லை. ஆனால், அவர்கள் (கடந்த ஜென்மத்தில்) ஆன்மீகத்தை கடைப்பிடித்திருக்கிறார்கள். அதனுடைய விளைவை தான் அவர்கள் அனுபவிக்கிறார்கள்.

**கேள்வி கேட்பவர்:** அப்படியென்றால், இந்த ஜென்மத்தில் ஆன்மீக பாதையில் நாம் மேற்கொள்ளும் முயற்சிகள், அடுத்த ஜென்மத்தில் பௌளதீக சுகத்தை அளிக்குமா?

**தாதாஸ்ரீ:** ஆம், அடுத்த ஜென்மத்தில் அதன் பலனை நீங்கள் அனுபவிப்பீர்கள். ஒரு நபர் இந்த ஜென்மத்தில் ஆன்மீகத்தில் நாட்டம் இல்லாமல் இருக்கலாம். ஆனால், கடந்த ஜென்மத்தின் விளைவு இந்த ஜென்மத்தில் வெளிப்படும்.

## வேலை செய்வதன் நோக்கம், சேவை செய்வதா? அல்லது பணம் சம்பாதிப்பதா?

ஒவ்வொரு வேலைக்குப் பின் ஒரு நோக்கம் இருக்கும், அதாவது எதற்காக அந்த வேலை செய்யப்படுகிறது என்று! ஒரு உன்னதமான நோக்கத்துடன் தீர்மானிக்கப்பட்டால், அதாவது உதாரணமாக, மருத்துவமனையை உருவாக்கும் ஒருவரின் நோக்கமானது, 'நோயாளிகள் எப்படி ஆரோக்கியத்தை பெறுவார்கள்? அவர்கள் எப்படி சுகப் படுவார்கள்? அவர்கள் எப்படி மகிழ்ச்சி அடைவார்கள்? அவர்களின் உயிர் சக்தியை எப்படி அதிகரிப்பது?' ஆகியவற்றை கருத்தில் கொண்டு, இத்தகைய உன்னதமான நோக்கங்களுடன் நீங்கள் சேவை செய்ய வேண்டும் என்று தீர்மானித்து, அந்த பணியை மேற்கொண்டால், அதன் துணை விளைபொருளாக கிடைப்பது எது? பணம் *(லக்ஷ்மி)*! எனவே,

பணம் என்பது ஒரு துணை விளைபொருள்; ஆகையால், பணம் என்பது ஒரு துணை விளைபொருள் தான்; அதை முதன்மை 'தயாரிப்பு' எனக் கருதிவிடாதீர்கள். இந்த முழு உலகமும் பணத்தை தான் முதன்மை 'தயாரிப்பு' என்றாக்கிவிட்டது. அதனால்தான், மக்கள் துணை விளைவுபொருளின் பலனைப் பெறுவதில்லை.

எனவே, உங்களின் தீர்மானம் சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கமாக மட்டுமே இருந்தால், பிறகு அதன் துணை விளைபொருளாக, அதிக பணம் வந்தடையும். எனவே, பணத்தை துணை விளைபொருளாக மட்டும் நீங்கள் வைத்துக் கொண்டால், அதிக பணம் வந்தடையும். மாறாக, பணம் சம்பாதிக்கும் நோக்கத்தில் மக்கள் இந்த சேவைகளைச் செய்கிறார்கள்; அதனால், பணம் வந்தடைவதில்லை. அதனால்தான், 'சேவை செய்ய வேண்டும் என்ற நிலையான நோக்கத்தை', கடைபிடிக்க வேண்டும் என்கிற எண்ணத்தை நிலைநிறுத்த வேண்டும் என்று நான் உங்களுக்கு கூறுகிறேன், பிறகு அதன் துணை விளைபொருள் தானாக வந்துகொண்டே இருக்கும். எப்படி ஒரு துணை விளைபொருளுக்காக எந்த முயற்சியுமே செய்ய வேண்டியதில்லையோ, அதற்கு எந்த செலவும் செய்ய வேண்டியதில்லையோ, அது இலவசமாக பெறப்படுவது, அதேபோன்று தான் பணமும் இலவசமாக பெறப்படுகிறது. உங்களுக்கு இத்தகைய பணம் வேண்டுமா அல்லது கருப்புப் பணம் வேண்டுமா? உங்களுக்கு கருப்புப் பணம் வேண்டாம் தானே? அப்போ, நல்லது! நீங்கள் இலவசமாக பெறுவது எவ்வளவு சிறந்தது!

எனவே, சேவை செய்யும் நோக்கத்தை தீர்மானியுங்கள்; அனைத்து மக்களுக்கும் சேவையாற்ற வேண்டும் என்று. நீங்கள் ஒரு கிளினிக்கைத் திறந்து இருக்கிறீர்கள் என்றால், அதைப் பற்றி உங்களுக்கு இருக்கிற அறிவையும், திறமையையும், மற்றவர்களுக்கு சேவை செய்யும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட வேண்டும்; அது

மட்டுமே உங்களின் நோக்கமாக இருக்க வேண்டும். அதன் பலனாக, நீங்கள் மற்ற பொருட்களை இலவசமாகப் பெறுவீர்கள். உங்களுக்கு ஒருபோதும் பணப் பற்றாக்குறை ஏற்படாது. அதேசமயம், பணம் சம்பாதிப்பதற்காக சேவை செய்பவர்களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆம், பணத்தை தயாரிப்பு செய்வதற்காகவே ஒரு 'தொழிற்சாலை' நிறுவப்பட்டிருந்தால், பிறகு, துணை விளைப்பொருள் என்று எதுவும் கிடைக்காது, அல்லவா! ஏனெனில் பணம் என்றதே ஒரு துணை விளைபொருள் தான்; துணை விளைவுபொருள்! எனவே, நீங்கள் (முதன்மை) 'தயாரிப்பு' பற்றி தீர்மானிக்க வேண்டும். அதன் மூலம், நீங்கள் துணை விளைபொருளை இலவசமாகப் பெற்றுக் கொண்டே இருப்பீர்கள்..

## இவ்வுலகம் நலம் பெற்று, மோட்சம் அடைய வேண்டும், என்பது மட்டுமே 'தயாரிப்பு'

ஆத்ம நிலையை அடைவதற்காக நாம் எதைச் செய்தாலும், அதுவே முக்கிய 'தயாரிப்பு' என்பதாகும். மேலும், அதன் பலனாகவே, துணை விளைபொருள் கிடைக்கப் பெற்று, உலக வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தும் பூர்த்தியாகிறது. நான் எனக்கென்று ஒரு வகையான முக்கிய 'தயாரிப்பை' மட்டுமே வைத்துக்கொள்கிறேன், 'இந்த உலகம் பரம சாந்தியை அடையட்டும், மற்றும் சிலர் மோட்சத்தை அடையட்டும்' என்பதே. இதுவே என்னுடைய 'தயாரிப்பு', இதன் மூலம் கிடைக்கும் துணை விளைவு பொருள்களை நான் தொடர்ந்து பெற்றுக் கொண்டிருக்கிறேன். உங்களுடன் ஒப்பிடும்போது 'நாங்கள்' வேறு தரமான (நல்ல) தேநீர் மற்றும் சிற்றுண்டிகளைப் பெறுகிறோம்; அதற்கு என்ன காரணம்? ஏனென்றால், என்னுடைய 'தயாரிப்பு' உங்களுடைய தயாரிப்பை விட உயர்ந்த ரகமானது. அதேபோன்று, உங்களுடைய 'தயாரிப்பு' உயர் தரத்தில் இருக்குமானால், உங்கள் துணை விளைவுபொருள் உயர்தரமானதாக இருக்கும். ஒவ்வொரு வேலைக்கு பின்னும் ஒரு நோக்கம் இருக்கும். சேவை செய்வது மட்டுமே உங்கள் நோக்கமாக

இருந்தால், நீங்கள் நிச்சயமாக துணை விளைபொருளாக பணத்தைப் பெறுவீர்கள்.

## கடவுளுக்கு சேவை செய்வதற்கான மறைமுகமான வழி

மற்ற அனைத்து ‘தயாரிப்பும்’ ஒரு துணை விளைபொருள் என்பதே ஆகும். (அதேசமயம்) இதில், உங்களுக்கு தேவையான அனைத்து பொருட்களும் தொடர்ந்து கிடைக்கும். மேலும், அவை எளிதாக கிடைக்கும். சற்று பாருங்கள், மக்கள் பணத்தை தங்கள் (முதன்மை) ‘தயாரிப்பு’ என்று செய்துக் கொண்டதால், தற்போது அவர்களுக்கு பணம் எளிதில் கிடைப்பதில்லை. அவர்கள் ஓய்வின்றி அங்குமிங்கும் திரிகிறார்கள், மற்றும் முகத்தை சுளித்துக் கொண்டிருக்கிறார்கள்! அவர்களுக்கு சாப்பிடுவதற்கும், பருகுவதற்கு சிறந்த வீட்டு சமையல் இருக்கிறது, பயணம் செய்ய மிகவும் நல்ல சாலைகள் இருக்கின்றன; சாலைகளில் நடக்கும்போது அவர்களின் கால்களில் தூசி கூட படிவதில்லை! எனவே, மக்களுக்குச் சேவை செய்யுங்கள். ஏனென்றால், கடவுள் அவர்களுக்குள் வீற்றிருக்கிறார். கடவுள் உள்ளுக்குள் அமர்ந்து இருக்கிறார். நீங்கள் கடவுளை தேடி வெளியே சென்றால், அவர் உங்களுக்கு கிடைக்கமாட்டார், ஏனென்றால் அவர் அங்கெல்லாம் இருப்பதில்லை.

நீங்கள் ஒரு மருத்துவர், அதனால் மனிதர்களுக்கு சேவை செய்யுங்கள் என்று நான் உங்களிடம் சொல்கிறேன். ஒருவர் கால்நடை மருத்துவராக இருந்தால், அவரிடம் விலங்குகளுக்கு சேவை செய்யும்படி கூறுவேன். கடவுள் விலங்குகளுக்குள்ளும் இருக்கிறார். இருப்பினும் மனிதர்களில், கடவுள் சிறப்பாக வெளிப்பட்டு இருக்கிறார்.

# மோட்சப் பாதை என்பது பிறருக்கு உதவும் பாதைக்கு முன்னதாக இருப்பது

**கேள்வி கேட்பவர்:** சமூக சேவை செய்யும் பாதையை விட மோட்சம் அடையும் பாதை எவ்வாறு மேலானது? அதைக் கொஞ்சம் விளக்கவும்.

**தாதாஶ்ரீ:** நீங்கள் ஒரு சமூக சேவகரிடம், "நீங்கள் யார்?" என்று கேட்டால், அவர் "நான் ஒரு சமூக சேவகர்" என்று கூறுவார். அவர் என்ன கூறுவார்? அப்படித்தான் அவர் தன்னை குறிப்பிடுவார், அல்லவா? அல்லது வேறு ஏதாவது சொல்வாரா?

**கேள்வி கேட்பவர்:** அப்படியேதான் அவர் சொல்வார்.

**தாதாஶ்ரீ:** "நான் ஒரு சமூக சேவகர்", என்று சொல்வது அஹங்காரம். அதேசமயம், நான் இந்த மனிதரிடம், "நீங்கள் யார்?" என்று கேட்டால், அதற்கு அவர், "இந்த உலகத்தில் அடையாளத்திற்காக, நான் சந்துபாய், ஆனால், உண்மையில் நான் சுத்தாத்மா" என்று கூறுவார். அதில் அஹங்காரம் இல்லை.

ஒரு சமூக சேவகரின் அஹங்காரம் ஒரு நல்ல காரணத்திற்கானது. இருப்பினும், அதுவும் ஒரு அஹங்காரம் தான். ஒருவரின் அஹங்காரத்தை ஒரு கெட்ட காரியத்திற்கு பயன்படுத்தினால், அவர் ஒரு அரக்கரைப் போல் கருதப்படுவார்! மேலும், ஒருவரது அஹங்காரம் நல்ல காரியத்திற்காக பயன்படுத்தப்பட்டால், அவர் ஒரு தெய்வமாக கருதப்படுவார். ஆனால், அஹங்காரம் என்பது எப்படியும் அஹங்காரம் தான். அஹங்காரம் என்றாலே, ஒருவர் பிறவி சுழற்சியிலேயே அலைந்து திரிந்துக் கொண்டு இருக்க வேண்டும். ஆனால், அஹங்காரம் முடிவுக்கு வரும் தருணத்தில், மோட்சத்தை இங்கேயே அனுபவிக்க முடியும்.

## ‘நான் யார்’ என்பதை அறிவதே தர்மம்

**கேள்வி கேட்பவர்:** ஒவ்வொரு மனிதரும் இந்த உலக வாழ்க்கையில் என்ன செய்ய வேண்டும்? அவருடைய *தர்மா* (செயல்பாடு) என்னவாக இருக்க வேண்டும்?

**தாதாஸ்ரீ:** அவர் என்ன செய்துக் கொண்டு இருக்கிறாரோ, அதுவே அவருடைய தர்மம் *(தர்மா)* ஆகும். ஆனால், “எனது *தர்மா* (மதம்)” என்று அவர் கூறுகிறார். அந்த தர்மத்தின்படி, (அவர் எதைச் செய்தாலும்), ‘நான் இதைச் செய்தேன்’ என்ற அஹங்காரம் அவரிடம் இருக்கும். எனவே, இப்போது ஒரு நபர் செய்ய வேண்டியதெல்லாம், ‘நான் யார்?’ என்பதை அறிந்து (உணர்ந்து) கொள்ள வேண்டும். அதை புரிந்து கொள்வதற்காக ஒருவர் முயற்சிகள் செய்ய வேண்டும். அதற்குப் பின்னர், அவருடைய அனைத்து புதிர்களும் தீர்க்கப்பட்டு விடும். அதன்பிறகு, புதிதாக எந்த புதிர்களும் தோன்றாது. புதிர்கள் தோன்றாத நிலையில், ஒருவர் சுதந்திரமாக இருக்கத் துவங்குவார்.

## உண்மையிலேயே, பணம் ஒரு துணை விளைபொருளாகும்

**கேள்வி கேட்பவர்:** ஒவ்வொரு மனிதருக்கும் கடமை என்பது இருக்கத்தான் செய்கிறது, அதாவது வழக்கறிஞராக இருந்தாலும் சரி, மருத்துவராக இருந்தாலும் சரி. ஆனால், கடமை என்பது உண்மையிலேயே ஒவ்வொரு மனிதருக்கும் நன்மை செய்ய வேண்டும் என்பதாக தான் இருக்க வேண்டும், அல்லவா?

**தாதாஸ்ரீ:** ஆம், ஆனால் அவர்கள், ‘நான் பிறருக்கு நன்மை செய்ய வேண்டும்’, என்று தீர்மானிக்காமல் அவர்கள் வேலை செய்து கொண்டே இருக்கிறார்கள். எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. எந்த நோக்கத்தையும் தீர்மானிக்காமல்,

அவர்களின் ‘இரயில்’ இலக்கின்றி பயணித்துக்கொண்டே இருக்கிறது. எந்த ‘ஊருக்கு’ செல்ல வேண்டும் என்பதில் அவருக்கு எந்த உறுதிப்பாடும் இல்லை, மற்றும் எந்த ‘ஊரில்’ (நிறுத்தம்) இறங்க வேண்டும் என்பதிலும் அவருக்கு எந்த உறுதிப்பாடும் இல்லை. அதுமட்டுமின்றி, செல்லும் வழியில் தேநீர் மற்றும் சிற்றுண்டிகள் எங்கு சாப்பிட வேண்டும் என்பதிலும் எந்த உறுதிப்பாடும் இருப்பதில்லை. ஒருவர் ஓடிக்கொண்டே இருக்கிறார்; அவ்வளவு தான். இதனால், அனைத்தும் சிக்கலாகிவிட்டது. நீங்கள் ஒரு நோக்கத்தை தீர்மானித்து, அதன் பின்னர் அனைத்து வேலைகளையும் செய்ய வேண்டும்.

நீங்கள் உங்கள் நோக்கத்தை மட்டும் மாற்றியமைக்க வேண்டும்; வேறு ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. ஒரு பம்பினுடைய இயந்திரத்தின் ஒரு பெல்ட்டை ஒரு பக்கத்தில் சப்ளை செய்தால், அது அந்த பக்கத்திற்கு தண்ணீரைக் கொடுக்கும், மற்றும் மறுபக்கத்தில் பெல்ட்டை சப்ளை செய்தால், அது உமியிலிருந்து அரிசியைப் பிரித்துக் கொடுக்கும். எனவே, பெல்ட் எங்கே சப்ளை செய்யப்படுகிறது என்பதில் தான் வித்தியாசம் இருக்கிறது. எனவே, உங்களுடைய நோக்கம் சரியான முறையில் தீர்மானிக்கப்பட வேண்டும். அந்த நோக்கம் உங்கள் ஆழ்ந்த எண்ணத்தில் *(லக்ஷ்)* இருக்க வேண்டும். அவ்வளவுதான்; இதில் வேறு எதுவும் இல்லை. பணத்தைப் பற்றி உங்களுக்கு ஆழ்ந்த எண்ணம் இருக்கக்கூடாது.

## தனக்கான சேவையில், அனைத்து மதங்களும் உள்ளடங்கும்

இரண்டு வகையான தர்மம் உள்ளன, இதை தவிர மூன்றாவது வகையான தர்மம் என்பது இல்லை. உலக மக்களுக்கு சேவை செய்யும் தர்மம் ஒரு வகையான தர்மம். மற்றும், ஒருவர் தனது சொரூபத்திற்கு *(ஆத்மா)* சேவை செய்வது

என்பது இரண்டாவது வகையான தர்மமாகும். ஆத்மாவிற்கு சேவை செய்பவர்கள் ‘உள்துறை’க்கு (ஆத்ம சொரூபத்தில்) செல்கிறார்கள். மற்றும், உலக மக்களுக்கு சேவை செய்பவர்கள், அதற்கான உலகப் பலன்களைப் பெறுகிறார்கள் அல்லது பௌதீக இன்பங்களை அனுபவிக்கிறார்கள். உலகத்திற்கான எந்த வகையான சேவையையும் உள்ளடக்காமல், ஆத்மாவிற்கான சேவையையும் உள்ளடக்காமல் இருக்கும் ஏதொன்றும், ஒரு வகையான சமூக பேச்சாகவே கருதப்படுகிறது! மேலும், அது ஒருவரின் அஹங்காரத்தின் போதையை *(கே.ஃப்)* பெருமளவில் அதிகரிக்கிறது. உலகத்திற்கான எந்த வகையான சேவையிலும் மதம் அடங்கியுள்ளது. உங்களால் உலக மக்களுக்கு சேவை செய்ய முடியாவிட்டால், உங்களுக்காக (ஆத்ம சொரூபத்திற்கு) சேவை செய்யுங்கள். உலகிற்குச் சேவை செய்வதைவிட, ஒருவர் தனக்காக (ஆத்ம சொரூபத்திற்கு) செய்யும் சேவை மிகவும் மேலானது. ஏனென்றால், தனக்காக (ஆத்ம சொரூபத்திற்கு) சேவை செய்பவர், யாரையும் துக்கப்படுத்தவே மாட்டார்!

**கேள்வி கேட்பவர்:** ஆனால், ஒருவருக்கு தனக்காக (ஆத்ம சொரூபத்திற்கு) சேவை செய்ய வேண்டும், என்று தோன்ற வேண்டும், அல்லவா!

**தாதாஸ்ரீ:** அப்படி ஒரு நபருக்கு தோன்றுவது என்பது எளிதானது அல்ல.

**கேள்வி கேட்பவர்:** அதை எப்படி செய்வது?

**தாதாஸ்ரீ:** அதற்கு, தனக்காக (ஆத்ம சொரூபத்திற்கு) சேவை செய்து கொண்டிருக்கும் *ஞானி புருஷரிடம்*, “ஐயா, நீங்கள் மற்றவர்களுக்கு சேவை செய்கிறீர்களா அல்லது உங்களுக்கு (ஆத்ம சொரூபத்திற்கு) சேவை செய்கிறீர்களா?” என்று கேட்க வேண்டும். அதற்கு அவர், “நான் எனக்கு (ஆத்ம சொரூபத்திற்கு)

சேவை செய்கிறேன்!" என்று பதிலளிப்பார். பிறகு நீங்கள் அவரிடம், "தயவுசெய்து அந்தப் பாதையை எனக்குக் காட்டுங்கள்!" என்று பணிவுடன் கேட்க வேண்டும்.

## தனக்காக (ஆத்ம சொரூபத்திற்கு) சேவையாற்றுவதன் தனித்துவமான அடையாளங்கள்

**கேள்வி கேட்பவர்:** தனக்காக (ஆத்ம சொரூபத்திற்கு) சேவை செய்வதன் தனித்துவமான அறிகுறிகள் *(லக்ஷ்னோ)* என்ன?

**தாதாஶ்ரீ:** தனக்காக (ஆத்ம சொரூபத்திற்கு) சேவை செய்வதன் முதன்மையான தனித்துவமிக்க அறிகுறி என்னவென்றால், அவர் யாரையும் துக்கப்படுத்தமாட்டார். இந்த வரையறைக்குள் எல்லாம் அடங்கிவிடுகிறது. அதில், அவர் பாலுணர்விலும் *(அப்ரம்மச்சர்ய)* ஈடுபடமாட்டார். பாலுணர்வில் ஈடுபடுவதும் ஒருவரை துக்கப்படுத்துவதற்கு சமமானதாகும். இரு தரப்பு சம்மதத்துடன் பாலுணர்வில் ஈடுபட்டாலும், கோடிக்கணக்கான உயிர்கள் அதனால் இறந்துப் போகின்றன! எனவே, அது (மற்றவர்களை) துக்கப்படுத்துவதற்குச் சமமாகிவிடுகிறது. எனவே, இதனால் சேவை செய்வதே முடிவுக்கு வந்துவிடுகிறது. அது தவிர, ஒருவர் பொய் சொல்லக்கூடாது, திருடக் கூடாது, வன்முறையில் *(ஹிம்சா)* ஈடுபடக் கூடாது மற்றும் சொத்துக் குவிப்பதிலும் ஈடுபடக் கூடாது. உடைமைகளை கைப்பற்றும் ஆர்வம்; பணம் குவிப்பதும் ஒருவகையான வன்முறைதான். எனவே, ஒருவர் பிறரை துக்கப்படுத்தும்போது, அதில் அனைத்தும் அடங்கி விடுகிறது.

**கேள்வி கேட்பவர்:** ஒருவர், தனக்காக (ஆத்ம சொரூபத்திற்கு) சேவையாற்றுவதற்கான வேறு அடையாளங்கள் எவை? ஒருவர் தனக்கு (ஆத்ம சொரூபத்திற்கு) சேவை செய்கிறார் என்று எப்போது குறிப்பிட முடியும்?

**தாதாஸ்ரீ:** உலக மக்கள் அனைவரும் தனக்காக (ஆத்ம சொரூபத்திற்கு) சேவை செய்யும் ஒருவரை துக்கப்படுத்தலாம். ஆனால், அவர் யாரையும் துக்கப்படுத்தவே மாட்டார். அவர் யாரையும் துக்கப்படுத்தாமல் இருப்பது மட்டுமல்லாமல், 'உங்களுக்கு ஏதாவது கெட்டது நடக்கட்டும்!' என்றும் அவர் ஒருபோதும் நினைக்கமாட்டார். "உங்களுக்கு நல்லது நடக்கட்டும்" என்றே அவர் கூறுவார்.

ஆம், மற்ற ஒரு நபர் எதிர்ப்பேச்சு பேசினாலும், எந்த பிரச்சனையும் இருக்காது. "நீ உபயோகமில்லாதவன், முரடன், பிறரை துன்பப்படுத்துபவன்" என்று யாராவது சொன்னாலும், எங்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லை. நீங்கள் எப்படி நடந்துகொள்கிறீர்கள் என்பதை மட்டுமே 'நீங்கள்' பார்க்க வேண்டும். மற்ற நபர் வானொலி ஒலிப்பது போல் தொடர்ந்து பேசிக்கொண்டே இருப்பார், வானொலி ஒலிப்பதை போன்று!

**கேள்வி கேட்பவர்:** உலக வாழ்க்கையில் அனைவரும் என்னை துக்கப்படுத்துவதை நான் தொடர்ந்து சகித்துக்கொண்டு இருக்க வேண்டும் என்பது சாத்தியமில்லை. என்னுடைய குடும்ப உறுப்பினர்கள் என்னை சற்று அவமானமாக நடத்தினாலே, என்னால் அதைத் தாங்கிக் கொள்ள முடிவதில்லை என்கிறபோது, பிறகு (மற்றவர்கள்)?

**தாதாஸ்ரீ:** அப்படியானால், வேறு என்ன உங்களால் செய்ய முடியும்? உங்களால் இப்படி (விழிப்புணர்வில்) இருக்க முடியவில்லையென்றால், பிறகு உங்களால் 'எதில்' இருக்க முடியும்? அதை எனக்குச் சொல்லுங்கள். நான் பேசும் கருத்து ஒருவருக்கு பிடிக்கவில்லையென்றால், அந்த நபரால் வேறு என்ன செய்ய முடியும்? பாதுகாப்பான 'இடம்' வேறு எதுவும் உள்ளதா? அப்படி எதுவும் இருந்தால், அதை எனக்குக் காட்டுங்கள்.

**கேள்வி கேட்பவர்:** இல்லை. அப்படி இல்லை. ஆனால், நம் அஹங்காரம் நிச்சயமாக இருக்கிறது, அல்லவா?

**தாதாஸ்ரீ:** உங்கள் பிறப்பிலிருந்தே அஹங்காரம் எல்லாவற்றிலும் தடையாக தான் இருக்கிறது. ஆனால், நீங்கள் தடைப்பட்டு நின்றுவிடக்கூடாது. அஹங்காரம், தான் விரும்பியபடி 'நடனம்' ஆடும். 'நீங்கள்', 'நடனம்' ஆட வேண்டிய அவசியம் இல்லை. 'நீங்கள்' அதில் இருந்து தனித்து இருக்கிறீர்கள்.

## இதனைத் தவிர்த்து, மற்றவையெல்லாம் வெறும் மதம் சார்ந்த பொழுதுபோக்குகள் தான்

இரண்டு மதங்கள் இந்த உலகில் இருக்கின்றன. மூன்றாவதாக ஒரு மதம் இல்லை. இரண்டு மதங்களை தவிர உள்ள மற்றவை அனைத்தும் அலங்காரமானவை! அலங்கார பாகத்தை தான் மக்கள் புகழ் பாடிக் கொண்டிருக்கிறார்கள்!

எங்கு சேவை என்பதே இல்லையோ, எந்த வகையான சேவையும் இல்லையோ, உலகத்திற்காக சேவை இல்லையோ, அவை அனைத்தும் மதம் சார்த்த பொழுதுபோக்கு *(மனோரஞ்சன்)* தான். மேலும், அது முழுவதும் அலங்கார பாகம் தான்!

சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணம் மற்றும் உயிரினங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்க வேண்டும் என்று இருக்கும் வரை புத்தியின் செயல்பாடு ஏற்றுக்கொள்ளத் தக்கது; அத்தகைய புத்தி நல்லதே. மற்றபடி, இதனைத் தவிர உள்ள மற்ற அனைத்து வகையான புத்தி பயனற்றது. மாறாக, அத்தகைய புத்தி பிணைப்பை உருவாக்குகிறது. அது ஒருவரை பிணைப்புக்குள்ளாக்கி, அடி - உதை வாங்க வைத்து, எதை பார்த்தாலும் லாபம் அல்லது நஷ்டத்தை பார்த்துக் கொண்டே இருக்கும். பேருந்தில் ஏறிய உடனேயே, 'இருக்கை எங்கே

காலியாக இருக்கிறது?' என்று பார்க்கும். இப்படிதான், புத்தி ஒருவரை அங்கும் இங்கும் அலைய வைக்கிறது! மற்றவர்களுக்கு சேவை செய்யும் புத்தி நல்லது. மற்றபடி, தனக்காக (ஆத்ம சொரூபத்திற்கு) சேவை செய்வதைப் போன்ற நல்ல புத்தி, வேறு எதிலும் இல்லை. தனக்காக (ஆத்ம சொரூபத்திற்கு) சேவை செய்யும் ஒருவர், முழு உலகத்திற்கும் சேவை செய்கிறார்.

## உலகில் எந்த உயிரினமும் துக்கப்படக் கூடாது

அதனால்தான் 'நாங்கள்' அனைவரிடமும், "என் அருமை தோழர்களே, காலையில் வீட்டை விட்டு நீங்கள் வெளியேறுவதற்கு முன்னர், உங்களுக்கு வேறு எதுவும் தெரியாவிட்டாலும், குறைந்தபட்சம் 'இவ்வுலகில் எந்தவொரு ஜீவராசியும், எனது மனம்-உடல்-பேச்சால் சிறிதளவு கூட துக்கமடையக்கூடாது' என்று கூறுங்கள். வெளியே செல்வதற்கு முன் இதை ஐந்து முறை சொல்லுங்கள்." மற்றபடி, பொறுப்புகள் அனைத்தும் என்னுடையது! தொடர்ந்து செல்லுங்கள்; உங்களுக்கு வேறு எதுவும் தெரியவில்லை என்றால், நான் அவற்றை கவனித்துக் கொள்கிறேன்! இதை மட்டும் சொல்லிவிடுங்கள்! பிறகு, யாரேனும் துக்கப்பட்டுவிட்டால், நான் பார்த்துக் கொள்கிறேன். ஆனால், இதை மட்டும் சொல்லுங்கள். இதில் ஏதாவது பிரச்சனை இருக்கிறதா?

**கேள்வி கேட்பவர்:** இதில் எந்த பிரச்சனையும் இல்லை.

**தாதாஸ்ரீ:** கண்டிப்பாக இதைச் சொல்லுங்கள். அதற்கு ஒருவர் "நான் யாரையாவது துக்கப்படுத்திவிட்டால் என்ன செய்வது?" என்று சொல்லலாம். அதை நீங்கள் பொருட்படுத்த வேண்டியது இல்லை. அதை (இயற்கையின்) உயர் நீதிமன்றத்தில் நான் பார்த்துக் கொள்கிறேன். அது வழக்கறிஞர் பார்த்துக்கொள்ள வேண்டும், அல்லவா? நான் உங்களுக்காக அனைத்தும்

செய்துவிடுவேன். என்னுடைய இந்த கருத்தை காலையில் ஐந்து முறை சொல்லுங்கள்! இதில் உங்களுக்கு ஏதாவது பிரச்சனை இருக்கிறதா? இது உங்களுக்கு சுமையாக தோன்றுகிறதா? தாதா பகவானை (உள்ளிருக்கும் இறைவனை) நினைவுக் கூர்ந்து முழு மனதுடன் இதைச் சொல்லுங்கள். பிறகு, என்ன பிரச்சினை இருக்கிறது?

**கேள்வி கேட்பவர்:** அப்படித்தான் நாங்கள் செய்கிறோம்.

**தாதாஸ்ரீ:** மிகவும் நல்லது, இதை மட்டும் செய்யுங்கள். இவ்வுலகில் செய்யத் தகுதியானதென்று வேறு எதுவும் இல்லை.

## உலக தார்மீகக் கடமைகள், சுருக்கமாக

உலக மக்களுக்கு தார்மீக கடமைகளை *(வ்யவஹார் தர்ம)* போதிக்க, 'நாங்கள்' அவர்களைப் பொதுநலம் உடையவர்களாக இருக்கும்படி கூறுகிறோம்; சுயநலத்திற்காக எந்த ஒரு எண்ணமும் தோன்றக்கூடாது. பொது நலனுக்காக *(லோக் கல்யாண்)*, பொதுநலம் உடையவர்களாக வேண்டும். நீங்கள் (உங்கள் பணத்தை) உங்களுக்காக செலவழித்தால், அது சாக்கடையில் சென்றடையும். மற்றும், பிறருக்காக எந்தவொரு செலவு செய்தாலும் அது உயர்வான அனுசரிப்பு ஆகும்.

சுத்தாத்மா பகவான் என்ன சொல்கிறார்? "மற்றவர்களை யார் கவனித்துக் கொள்கிறாரோ அவரை நான் கவனித்துக் கொள்வேன். மற்றும், தன்னை மட்டுமே கவனித்துக் கொள்பவரை, அவரை அவரே தற்காத்துக் கொள்ளட்டும் என்று நான் விட்டுவிடுவேன்".

உலகத்திற்காக பணியாற்றவும்; உங்களுடைய வேலைகள் நிச்சயமாக நிறைவேறிவிடும். நீங்கள் உலகத்திற்காக பணியாற்றும்போது, உங்களுடைய பணிகள் தொடர்ந்து தானாகவே

நடைபெறும். அப்போதுதான், நீங்கள் அதன் அற்புதத்தை உணர்வீர்கள்!

உலக வாழ்க்கையின் தன்மை என்ன? ஒவ்வொரு உயிரினத்திலும் பகவான் வீற்றிருக்கிறார். எனவே, நீங்கள் எந்தவொரு உயிரினத்திற்கும் துன்பம் ஏற்படுத்தினால், அல்லது துக்கப்படுத்தினாலும், அதர்மம் (தீய செயல்) தோன்றும். ஒரு உயிரினத்திற்கு நீங்கள் மகிழ்ச்சி அளித்தால், அது தர்மத்தை (நற்செயல்) தோன்றச் செய்யும். அதர்மத்தின் விளைவு நீங்கள் விரும்புவதற்கு முரணாக அமையும். தர்மத்தின் விளைவு நீங்கள் விரும்புவதற்கு ஏற்ப அமையும்.

இதர மதங்கள் அனைத்தும் உலக வாழ்க்கைக்கான பாதையாகும், அவை சமூக சேவையின் பாதையாகும். மோட்சப் பாதை சமூக சேவைக்கு அப்பாற்பட்டது; அது ஆத்ம சொரூபத்தில் *(ஸ்வ-ரமணதா)* நிலைக் கொள்ளும் பாதையாகும்.

## மதத்தின் ஆரம்பம்

ஒரு மனிதன் மற்றவர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கத் தொடங்கும் தருணத்திலிருந்து தான், தர்மம் தொடங்குகிறது. ஒருவர் தன்னுடைய மகிழ்ச்சியை பற்றி கவலைப்படாமல்; மாறாக அவர், ‘மற்றவர்களின் சிரமங்களை எவ்வாறு நீக்குவது’, என்ற ஆழ்ந்த சிந்தனையில் தொடர்ந்து இருக்கும் தருணத்திலிருந்து தான் காருண்யம் *(காருண்யதா)* அதாவது நிபந்தனையற்ற, நிலையான கருணை தொடங்குகிறது. குழந்தை பருவத்திலிருந்தே, மற்றவர்களின் சிரமங்களை நீக்குவதில் நான் எப்போதும் அக்கறை கொண்டிருந்தேன். தன்னைப் (சார்ந்த ஆத்மா) பற்றிய சிந்தனையே இல்லாமல் இருப்பதை தான், காருண்யம் எனக் குறிப்பிடப்படுகிறது. உண்மையில் இதன் மூலமாக தான், ஆத்ம ஞானம் *(ஞான்)* வெளிப்படுகிறது.

ஒருவர் பணியிலிருந்து ஓய்வுபெறும் போது, அவர் கௌரவத் தலைவராகிறார். அவர் கௌரவத்திற்கு வேலை செய்கிறார்! ஏய், முட்டாளே! நீங்கள் ஓய்வு பெறப்போகும் போதும் ஏன் பிரச்சனைகளை வரவழைத்துக் கொள்கிறீர்கள்? நீங்கள் வெறுமனே பிரச்சனைகளை ஏற்படுத்திக் கொள்கிறீர்கள். இவை அனைத்தும் உங்களுக்கு நீங்களே ஏற்படுத்திக் கொள்ளும் பிரச்சனைகளே தவிர வேறு ஒன்றுமே இல்லை.

மேலும், உங்களால் (மற்றவர்களுக்கு) சேவை செய்ய முடியாவிட்டாலும், உங்களுக்கு தீங்கு விளைவித்த ஒருவராக இருந்தாலும் சரி, யாரும் துக்கப்படாதவாறு நீங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால், அது ஒரு விதமான கடந்த ஜென்ம கர்ம கணக்காக இருக்கும். ஆனால், நீங்கள் அவரை துக்கப்படுத்தாதவாறு நடந்து கொள்ள வேண்டும்.

## இதுவே கற்றுக்கொள்ள தகுதியான ஒரே விஷயம்

**கேள்வி கேட்பவர்:** மற்றவர்களுக்கு மகிழ்ச்சி கொடுத்து மகிழ்ச்சி அடைவது.

**தாதாஸ்ரீ:** ஆம். இதை மட்டும் நீங்கள் கற்றுக் கொள்ளுங்கள்! கற்கத் தகுந்தது என்று வேறு எதுவும் இல்லை. உண்மையில், இதைத் தவிர வேறு எந்த தர்மமும் உலகில் இல்லை. இதுவே தர்மம், வேறு எந்த தர்மமும் இல்லை. நீங்கள் மற்றவர்களுக்கு அளிக்கும் மகிழ்ச்சி; அதிலிருந்தே நீங்கள் மகிழ்ச்சி அடைவீர்கள்.

நீங்கள் செய்யும் இந்த வியாபாரம் அல்லது தொழிலிருந்து, நீங்கள் கொஞ்சம் பணம் சம்பாதிக்கிறீர்கள். ஆகவே, ஊரில் உள்ள தேவைப்படும் மக்களுக்கு உணவு மற்றும் தண்ணீர் கொடுக்கலாம். ஒரு ஏழை மக்களின் மகள் திருமணத்தின் போது, நீங்கள் கொஞ்சம் பணம் கொடுத்து உதவலாம். இப்படியெல்லாம்,

நீங்கள் பிறருக்கு உதவி செய்து அவர்களுடைய காரியங்களை நிறைவேறச் செய்ய வேண்டும், அல்லவா! நீங்கள் மற்றொருவரின் இதயத்தை சாந்தப்படுத்தி குளிரச் செய்தால், கடவுள் உங்கள் இதயத்தை சாந்தப்படுத்தி குளிரச் செய்வார்.

## ஞானி எழுத்துப்பூர்வமாக உத்தரவாதம் அளிக்கிறார்

**கேள்வி கேட்பவர்:** இப்போதெல்லாம், நாம் மற்றொருவரின் இதயத்தை சாந்தப்படுத்த முயற்சிக்கும்போது, நம்மிடம் பிக்பாக்கெட் அடித்துவிடுகிறார்!

**தாதாஸ்ரீ:** உங்களிடம் பிக்பாக்கெட் அடித்துவிட்டாலும் பரவாயில்லை. அது திருப்பிச் செலுத்தப்படுகிற கடந்த ஜென்ம கர்ம கணக்காக இருக்கும். ஆனால், நீங்கள் இப்போது மற்றொருவரை சாந்தப்படுத்தி குளிரச் செய்தால், அதற்கான வெகுமதி நிச்சயமாக வந்தடையும். மற்றும், அதற்கு நான் நூறு சதவீதம் எழுத்துப்பூர்வமாக உத்தரவாதம் அளிக்கிறேன். நான் (கடந்த ஜென்மத்தில்) மகிழ்ச்சியை அளித்திருக்க வேண்டும். அதனால்தான், இப்போது நான் மகிழ்ச்சியைப் பெறுகிறேன். ‘மகிழ்ச்சியின் அங்காடி’யை திறப்பதே எனது ‘தொழில்’. நீங்கள் ‘கவலையின் அங்காடி’யை திறக்கக் கூடாது. ஒரு ‘மகிழ்ச்சியின் அங்காடி’; பின்னர், மகிழ்ச்சி வேண்டுவோர் கடைக்கு வந்து, அதை எடுத்துக் கொள்ளலாம். மற்றும், யாராவது துக்கம் கொடுப்பதற்கு வந்தால், நீங்கள் அவரிடம், “வாருங்கள்! எனக்கு இன்னும் சிலது பாக்கி உள்ளன; அதை கொடுங்கள்”, என்று சொல்ல வேண்டும். நீங்கள் அதை ஓரமாக வைத்துவிட வேண்டும். எனவே, யாராவது உங்களிடம் துக்கத்தை கொடுக்க வந்தால், நீங்கள் அதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். உங்களுக்கு கர்ம கணக்கு பாக்கி உள்ளதால், அவர் நிச்சயமாக அதை கொடுப்பதற்கு வருவார், அல்லவா? மற்றபடி, எனக்கு துக்கத்தை கொடுப்பதற்கு யாரும் வருவதில்லை.

எனவே, அனைவருக்கும் மகிழ்ச்சி அளிக்க வேண்டும் என்று, ‘மகிழ்ச்சியின் அங்காடி’யைத் திறக்கவும். யாருக்கும் துக்கத்தை கொடுக்கக்கூடாது. துக்கம் அளிப்பவர்களை ஏதோ ஒரு நாள், யாரோ ஒருவர் கத்தியால் குத்திவிடுவார், அல்லவா? அவர் (பழி வாங்குவதற்காக) காத்துக் கொண்டிருப்பார். பழிவாங்குபவர்கள், பழிதீர்ப்பதற்காக மட்டும் அவ்வாறு செய்வதில்லை; அவர்கள் தங்களின் துக்கத்தினால் பழிவாங்குகிறார்கள்.

## நீங்கள் மற்றவர்களுக்கு சேவை செய்தால், நீங்கள் சேவையைப் பெறுவீர்கள்

இவ்வுலகில் முதன்மையாக சேவை பெறுவதற்கு தகுதியானவர்கள், பெற்றோர்கள்.

நீங்கள் உங்கள் பெற்றோருக்கு சேவை செய்தால், உங்கள் அமைதியை ஒருபோதும் இழக்க மாட்டீர்கள். இருப்பினும், இன்று மக்கள் தங்கள் பெற்றோர்களுக்கு முழு மனதுடன் சேவை செய்வதில்லை. ஒரு மனிதருக்கு முப்பது வயதாகும்போது, அவருடைய ‘குரு’ (மனைவி) அவரிடம், “என்னை ஒரு புதிய வீட்டிற்கு அழைத்துச் செல்” என்று கூறுவார். இப்படிப்பட்ட ஒரு ‘குரு’வை நீங்கள் பார்த்துள்ளீர்களா? ஒருவரின் இருபத்தைந்து, முப்பது வயதில், ‘குரு’ கிடைத்து விடுகிறார். ‘குரு’ கிடைத்தவுடன், அவர் மாறிவிடுகிறார். “உனக்கு உன் அம்மாவை பற்றித் தெரியாது” என்று அந்த ‘குரு’ கூறுவார். ஆரம்பத்தில், அவர் அதை பொருட்படுத்த மாட்டார். முதல் முறை அவர் அதை பொருட்படுத்த மாட்டார், ஆனால் இரண்டு அல்லது மூன்று முறை சொன்ன பிறகு, அவர் அதை ஒப்புக்கொண்டுவிடுவார்.

மற்றபடி, இந்த உலகம் எப்படியென்றால், யாரொருவர் தூய்மையான உள்ளத்துடன் பெற்றோருக்குச் சேவை செய்கிறார்களோ அவர்கள் ஒரு போதும் மனக் கலக்கமடைய

மாட்டார். இந்த உலகம் நிராகரிக்கப்பட வேண்டிய ஒன்றல்ல. இருப்பினும் மக்கள், “பெற்றோருக்கு சேவை செய்யாதது குழந்தைகளின் தவறு, இதில் தாய், தந்தையின் தவறு என்ன?” என்று கேட்பதுண்டு. அதற்கு நான் அவர்களிடம், “அவர்கள், தங்கள் பெற்றோருக்கு சேவை செய்யாமல் இருந்திருப்பார்கள். அதனால்தான், அவர்களுக்கும் கிடைப்பதில்லை” என்று கூறினேன். எனவே, இது ‘பரம்பரை நடைமுறையின்’ குறைபாடு தான். இப்போது இந்த ‘பரம்பரை நடைமுறைக்குப்’ பதிலாக, ஒருவர் அந்த நடைமுறையை மாற்றி புதுப்பித்தால், அது நல்லதாக மாறிவிடும்.

அதனால்தான், ஒவ்வொரு வீட்டிலும் இந்த நடைமுறையை வடிவமைத்து வருகிறேன். இதன்மூலம் எல்லா குழந்தைகளும் சரியாகிவிட்டார்கள். பெற்றோர்களும் சரியாகிவிட்டார்கள், மற்றும் குழந்தைகளும் சரியாகிவிடட்டார்கள்!

முதியோர்களுக்கு சேவை செய்வதன் மூலம், நமது ஆன்மீக ஞானம் மலர்கிறது. கடவுள் சிலைக்கு சேவை செய்ய முடியுமா? சிலையின் கால்களுக்கு வலி ஏற்படுமா? சேவை என்பது உண்மையில் ஒருவரின் பாதுகாவலர்களுக்காகவோ, வயதானவர்களுக்காகவோ அல்லது ஒருவரின் குருவுக்காகவோ செய்யப்பட வேண்டும்.

## சேவையைப் புறக்கணித்துவிட்டு, தர்மத்தை கடைப்பிடிக்க முடியுமா?

உங்கள் பெற்றோருக்கு சேவை செய்வது, உங்களுடைய தார்மீக கடமை *(தர்மம்)* ஆகும். கர்மக் கணக்கு எப்படி இருந்தாலும், நீங்கள் அவர்களுக்கு சேவை செய்தாக வேண்டும்; அது உங்கள் தார்மீக கடமை. உங்கள் தார்மீக கடமையை நீங்கள் எந்த அளவிற்கு நிறைவேற்றுகிறீர்களோ, அந்தளவிற்கு

மகிழ்ச்சி உங்களுக்குள் எழும். முதியவர்கள் சேவையைப் பெறுவார்கள், மேலும் அதனுடன் உங்களுக்குள் மகிழ்ச்சியும் எழும். உங்கள் பெற்றோருக்கு நீங்கள் மகிழ்ச்சியைக் கொடுத்தால், உங்களுக்குள் மகிழ்ச்சி எழும். பெற்றோரை மகிழ்விப்பவர்கள் ஒருபோதும் துக்கத்துடன் இருக்க மாட்டார்கள்.

ஒருமுறை ஒரு புகழ்பெற்ற ஆசிரமத்தில், ஒருவரை நான் சந்தித்தேன். அவரிடம், “நீங்கள் எப்போதிருந்து இங்கு இருக்கிறீர்கள்?” என்று கேட்டேன். அதற்கு அவர், “கடந்த பத்து வருடங்களாக நான் இந்த ஆசிரமத்தில் தான் வசித்து வருகிறேன்” என்று பதிலளித்தார். பிறகு, நான் அவரிடம், “கிராமத்தில், உங்கள் பெற்றோர்கள் மிகவும் வறுமையிலும், வாழ்க்கையின் கடைசிக் கட்டத்தில் உள்ளார்கள்; அவர்கள் மிகவும் பரிதாப நிலையில் இருக்கிறார்கள்” என்றேன். அதற்கு அவர், “அதற்கு நான் என்ன செய்ய முடியும்? நான் அவர்களுக்கு உதவச் சென்றால், என் மதத்தை *(தர்மா)* நான் கடைப்பிடிப்பதை விட்டுவிட வேண்டியிருக்கும்” என்றார். இதை எப்படி நீங்கள் மதம் என்று குறிப்பிட முடியும்? நீங்கள் உங்கள் தாய் தந்தையை கவனித்துக்கொள்வது, உங்கள் சகோதரரை கவனித்துக்கொள்வது மற்றும் அனைவரையும் கவனித்துக்கொள்வதை தான் *தர்மம்* என்று அழைக்கப்படுகிறது. உங்கள் உலகியல் தொடர்புகள் சிறந்ததாக இருக்க வேண்டும். ஒருவரின் தர்மத்தை இழிவாக புறக்கணிக்கும் ஒரு உலகியல் தொடர்பு, மற்றும் பெற்றோருடனான உறவையும் இழிவாக புறக்கணிப்பதை, எப்படி தர்மம் என்று குறிப்பிடுவது?

உங்களுக்கு பெற்றோர் இருக்கிறார்களா, இல்லையா?

**கேள்வி கேட்பவர்:** எனக்கு ஒரு தாய் இருக்கிறார்.

**தாதாஸ்ரீ:** இப்போதிருந்து, அவர்களுக்கு நன்றாக சேவை செய்யுங்கள். இப்படி ஒரு வாய்ப்பு மீண்டும் மீண்டும் உங்களுக்கு

கிடைக்காது. மேலும், “நான் துன்பமாக இருக்கிறேன்” என்று ஒருவர் கூறினால், அப்போது அவரிடம் “உங்கள் பெற்றோருக்கு நல்ல முறையில் நீங்கள் சேவை செய்தால், இந்த உலக வாழ்க்கையில் நீங்கள் எந்தத் துன்பத்தையும் சந்திக்க மாட்டீர்கள்” என்று நான் கூறுவேன். பெற்றோருக்கு சேவை செய்வதால், அவர் பணக்காரர் ஆகாமல் இருக்கலாம்; ஆனால், குறைந்தபட்சம் அவர் எந்த துன்பங்களையும் சந்திக்க மாட்டார். இதற்கு பிறகுதான் தர்மம் வரவேண்டும். உறவை அவமதித்து புறக்கணிப்பு செய்வதை எப்படி தர்மம் என்று குறிப்பிட முடியும்?

நானும், என் தாய்க்கு சேவை செய்துள்ளேன். அப்போது, நான் இருபது வயதுடையவனாக, இளைஞனாக இருந்தேன். ஆகையால், என் தாய்க்கு என்னால் சேவை செய்ய முடிந்தது. நான் என் தந்தையின் சடலத்தை தான் தோளில் சுமந்துக் கொண்டு எடுத்து சென்றேன். என்னால் என் தந்தைக்கு அவ்வளவு சேவையை தான் செய்ய முடிந்தது. அப்போது நான், ‘எனக்கு இவரைப் போன்று எத்தனையோ தந்தைகள் இருந்திருக்கிறார்கள்! இப்போது, என்ன செய்வது?’ என்று உணர்ந்தேன். அதற்கு விடை என்னவென்றால், ‘தற்போது வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு சேவை செய்யவும். மரணம் அடைந்தவர்கள் நம்மைவிட்டு பிரிந்துவிட்டார்கள். ஆனால், தற்போது உயிருடன் இருப்பவர்களுக்கு சேவை செய்; உயிருடன் இல்லாதவர்களை நினைத்து கவலைப்பட வேண்டாம். கடந்த ஜென்மங்களில் நமக்கு எத்தனையோ தந்தைகள் இருந்திருக்கிறார்கள். கடந்து போனதை மறந்துவிடுங்கள், இப்போது, புதிதாகத் தொடங்குங்கள்’ என்பது தான். உங்கள் பெற்றோருக்குச் சேவை செய்வது உங்களுக்கு நேரடியான பலனைத் தரும். கடவுள் கண்ணுக்குத் தெரிவதில்லை, அதேசமயம், உங்கள் பெற்றோர்கள் உங்கள் கண்களுக்குத் தெரிகிறார்கள். கடவுளைப் பார்க்க முடியுமா? ஆனால், உங்கள் பெற்றோர்களை உங்களால் பார்க்க முடியும்.

## முதியவர்களுக்கு உண்மையிலேயே சேவை அவசியமானது

தற்போதைய காலகட்டத்தில், அறுபது முதல் அறுபத்தைந்து வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் தான் மிகவும் துயரத்தில் உள்ளனர். இன்றைய காலத்தில் முதியோர்கள் தான் மிகவும் துயரத்தில் இருக்கின்றனர். ஆனால், அவர்களால் யாரிடம் இதை முறையிட முடியும்? அவர்களின் பிள்ளைகள் அவர்களை கவனிப்பதில்லை. முந்தைய தலைமுறைக்கும், புதிய தலைமுறைக்கும் இடையே பெரிய இடைவெளி உள்ளது. முதியவர்கள் தங்களது பண்டைய கால பழக்க வழக்கங்களை விடுவதில்லை. அதற்காக அவர்கள் அடி வாங்கினாலும், அவர்கள் அவற்றை விடுவதில்லை.

**கேள்வி கேட்பவர்:** இது அறுபத்தைந்து வயதுடைய எல்லா முதியவர்களின் நிலையும் இதுதான், அல்லவா!

**தாதாஸ்ரீ:** ஆம், இதே நிலை தான்! அவர்கள் உண்மையில் அதே நிலைமையில்தான் இருக்கிறார்கள்! ஆகவே, இந்தக் காலத்தில், உண்மையில் நாம் செய்ய வேண்டியது என்ன? ஏதேனும் ஒரு இடத்தில், குறிப்பாக முதியோர்கள் வசிப்பதற்கான இடம் என்று இருந்தால், அது மிகவும் நன்றாக இருக்கும். எனவே, 'எங்களுக்கு' ஒரு யோசனை இருந்ததால், நான் கூறினேன்: "இப்படி ஏதாவது நம்மால் செய்ய முடியும் என்றால், முதலில், இந்த ஞானத்தை *(ஞான்)* அவர்களுக்கு வழங்க வேண்டும். அவர்களின் உணவுக்கான ஏற்பாடுகள் மற்றும் இதர தேவைகள் அனைத்தையும் ஏதேனும் பொது அல்லது சமூக சேவை குழுவிற்கு வழங்கினால், அந்த குழு அதை கவனித்துக் கொள்ளும். இருப்பினும், அவர்களுக்கு இந்த ஞானம் *(ஞான்)* வழங்கப்பட்டு, அவர்கள் தொடர்ந்து கடவுளைப் பக்தியுடன் தரிசனம் *(தர்ஷன்)* செய்தால், அவர்களின் 'வேலை' தொடர்ந்துக் கொண்டு இருக்கும்.

அவர்களுக்கு இந்த ஞானம் *(ஞான்)* கிடைத்தால், அப்பாவி மக்கள் நிம்மதியாக இருப்பார்கள். இல்லையெனில், எதன் அடிப்படையில் அவர்கள் நிம்மதியாக இருக்க முடியும்? நீங்கள் என்ன நினைக்கறீர்கள்?

**கேள்வி கேட்பவர்:** ஆம், உண்மைதான்.

**தாதாஸ்ரீ:** இந்த யோசனை உங்களுக்கு பிடித்திருக்கிறதா, இல்லையா?

ஒருவரின் முதுமை காலத்தில், அதாவது அறுபது முதல் அறுபத்தைந்து வயதுக்கு மேற்பட்டவர், யாரும் கவனிக்காத ஒரு வீட்டில் வசிக்கிறார் என்றால், என்ன நடக்கும்? அவரால் எதையும் (யாரிடமும்) சொல்ல முடியாது. மேலும், அவர் தன்னுள் எதிர்மறை கர்மாவை பிணைத்துக் கொள்கிறார். எனவே, மக்கள் அறிமுகப்படுத்தியிருக்கும் 'முதியோர் இல்லம்' (ஓய்வு பெற்றவர்களுக்கான விடுதிகள்) என்ற கருத்து தவறான கருத்தல்ல. அது மிகவும் உபயோகமானது. இருப்பினும், அதை 'முதியோர் இல்லம்' என்று அழைக்கப்படக் கூடாது, அதற்கு கண்ணியமான பெயரை சூட்ட வேண்டும். அதனால் அவர்கள் மரியாதைக்குரியவர்களாக உணர்வார்கள்.

## சேவை செய்வதினால் மகிழ்ச்சி மற்றும் செழிப்பான வாழ்க்கைக்கு வழிவகுக்கிறது

முதலில், உங்களைப் பெற்றெடுத்த உங்கள் பெற்றோருக்கு நீங்கள் சேவை செய்ய வேண்டும். அடுத்து, நீங்கள் உங்கள் குருவுக்கு சேவை செய்ய வேண்டும். குருவுக்கும், பெற்றோருக்கும் கண்டிப்பாக சேவை செய்ய வேண்டும். ஒருவேளை, குரு நல்லவராக இல்லாதபோது, அந்த சேவையை விட்டுவிட வேண்டும்.

**கேள்வி கேட்பவர்:** தற்போது, பெற்றோருக்கு சேவை செய்யாதவர்களும் இருக்கிறார்கள், அவர்களின் நிலை என்ன? அவர்கள் அடுத்த ஜென்மத்தில் எந்த வாழ்க்கை கதியை அடைவார்கள்?

**தாதாஸ்ரீ:** பெற்றோருக்கு சேவை செய்யாதவர், இந்த ஜென்மத்தில் மகிழ்ச்சியாக இருக்க மாட்டார். ஒருவரின் பெற்றோருக்கு சேவை செய்வதன் வெளிப்படையான பலனுக்கு உதாரணம் என்ன? உங்கள் வாழ்நாள் முழுவதும் நீங்கள் எந்த துன்பத்தையும் சந்திக்க மாட்டீர்கள் என்பதே. உங்கள் பெற்றோருக்கு சேவை செய்வதால், வாழ்க்கையில் எந்த கஷ்டமும் உங்களுக்கு வராது!

இந்தியாவின் பண்டைய கால விஞ்ஞானம் மிகவும் அற்புதமானதாக இருந்தது. அதனால்தான் வேதங்களில், 'உன் பெற்றோருக்கு சேவை செய். அப்படிச் செய்வதன் மூலம், உங்கள் வாழ்நாள் முழுவதும் நீங்கள் எந்தவிதமான பொருளாதார சிக்கல்களையும் சந்திக்க வேண்டியிருக்காது', என்று வேதம் எழுதியவர்கள் வகுத்துள்ளனர். இப்போது இது நியாயமானதா, இல்லையா என்பது வேறு விஷயம். ஆனால், உங்கள் பெற்றோருக்குச் சேவை செய்வது நிச்சயமாக மதிப்பிற்குரியது. ஏனென்றால், நீங்கள் அவர்களுக்கு சேவை செய்யாவிட்டால், யாருடைய சேவையை நீங்கள் பெறுவீர்கள்? நீங்கள் சேவை பெறத் தகுதியானவர் என்பதை அடுத்த தலைமுறை எவ்வாறு கற்றுக் கொள்வார்கள்? குழந்தைகள் எல்லாவற்றையும் கவனிப்பார்கள். அதாவது அவர்கள், 'என் தந்தை அவருடைய தந்தைக்கு ஒருபோதும் சேவை செய்ததில்லை!' என்பதை கவனிப்பார்கள். எனவே, இத்தகைய நன்னெறி பண்புகளை அவர்களின் மனதில் நிச்சயமாக பதிய வைக்க முடியாது, அல்லவா!

**கேள்வி கேட்பவர்:** நான் கேட்க நினைத்தது, ஒரு மகன் தன் தந்தைக்கு செய்ய வேண்டிய கடமை என்ன?

**தாதாஸ்ரீ:** குழந்தைகள் தங்கள் தந்தைக்கு செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய வேண்டும்; அப்படி செய்வதால், அந்த குழந்தைகள் அதிலிருந்து எவ்வாறு பயனடைகிறார்கள்? பெற்றோருக்குச் சேவை செய்யும் பிள்ளைகளுக்குப் பணப் பற்றறாக்குறை ஏற்படாது, அவர்களுக்குத் தேவையானவை அனைத்தும் அவர்கள் பெறுவார்கள். மற்றும் குருவுக்கு சேவை செய்பவர்கள் மோட்சம் அடைவார்கள். இருப்பினும், இந்த காலத்தில் மக்கள் தங்கள் தாய், தந்தை அல்லது தங்கள் குருவுக்கு சேவைச் செய்வதில்லை, அல்லவா? எனவே, அவர்கள் அனைவரும் துக்கத்தை அனுபவிப்பார்கள்.

## சிறந்த உபகாரி, பெற்றோர்களே!

பெற்றோரின் குறைகளைக் காணும் ஒருவர் எப்பொழுதும் உயரமாட்டார். அவர் ஒருவேளை பணக்காரராக இருக்கலாம்; இருப்பினும், அவர் ஒருபோதும் ஆன்மீக முன்னேற்றத்தை அடைய மாட்டார். ஒருவர் தன் பெற்றோரின் குறைகளை பார்க்கவே கூடாது. அவர்களின் உபகாரத்தை உங்களால் எப்படி மறக்க முடியும். யாராவது உங்களுக்கு தேநீர் பரிமாறி இருந்தால், அவர்களின் உபகாரத்தை நீங்கள் மறக்கக் கூடாது. அப்படி இருக்கையில், உங்கள் பெற்றோரின் உபகாரத்தை எப்படி மறக்கலாம்? உங்களுக்கு புரிந்ததா? ஆம்... எனவே நீங்கள் அவர்களுக்கு மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். நீங்கள் அவர்களுக்கு சிறப்பாக சேவை செய்ய வேண்டும். நீங்கள் உங்கள் தாய் - தந்தைக்கு சிறப்பாக சேவை செய்ய வேண்டும்.

இந்த உலகில், இந்த மூன்று பேரும் உங்களுக்கு பெரிதும் உபகாரம் செய்திருக்கிறார்கள். அதாவது, உங்கள் தந்தை, தாய்

மற்றும் உங்கள் குருவின் உபகாரத்தை நீங்கள் ஒருபோதும் நிச்சயமாக மறந்துவிடக் கூடாது! உங்களை சரியான பாதையில் வழிநடக்கச் செய்த, இந்த மூவரின் உபகாரமும், ஒருபோதும் மறக்க முடியாதது.

## ஞானிக்கு சேவை செய்வதன் பலன்

உங்களுடைய சேவை பெறத் தகுதியான *(சேவ்ய)* நிலையை பிறருக்கு வெளிக்காட்டிக் கொள்ளாமல், உங்கள் பணிகளை ஒரு சேவகராக *(சேவக்)* அதாவது மற்றவர்களுக்கு சேவை செய்பவராக தொடர்ந்து செய்யவும். *ஞானி புருஷர்* உண்மையில் இந்த முழு உலகத்தின் சேவகராகவும், சேவ்யராகவும் கருதப்படுகிறார். 'நான்' உண்மையில் முழு உலகத்திற்கும் சேவை செய்கிறேன். மேலும், 'நான்' முழு உலகத்தின் சேவையையும் ஏற்றுக்கொள்கிறேன். இதை உங்களால் புரிந்துகொள்ள முடிந்தால், உங்கள் 'வேலை' நிறைவேறிவிடும்!

யாரொருவர் என்னைச் சந்திக்க வந்தாலும், அவர் நிச்சயமாக தரிசனத்தின் பலனைப் பெற வேண்டும் (தாதாஸ்ரீயின் தரிசனம்) என்ற வரையில் 'நான்' பொறுப்பேற்கிறேன். 'எனக்கு' யாராவது சேவை செய்தால், அந்த நபரின் பொறுப்பு என்னுடையது. 'நான்' நிச்சயமாக அந்த நபரை மோட்சத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும்.

## ஜெய் சத்சிதானந்தம்

### (அழிவற்றிருக்கும் பரம்பொருளை அறிவதே பேரானந்தம்)

## நவ கலமோ
## (ஒன்பது ஆழ்ந்த உள்நோக்கம்)
## (தினந்தோறும் மூன்று முறை சொல்லவும்)

(தாதாவிடம் தினந்தோறும் முழு மனதோடு வேண்டி கொள்ள வேண்டும். இதை ஒப்பிக்காமல், உள்ளார்ந்த, கவனத்துடன் பாவிக்க வேண்டும். எல்லாவித சாஸ்திரங்களின் சாரம் இதில் அடங்கிவிடுகிறது)

1. அன்பார்ந்த தாதா பகவானே (நம்முள் இருக்கும் சுத்தாத்மா), யாதொரு ஜீவராசியின் 'நான்' என்ற தன்னுணர்வை சிறிதளவு கூட துக்கப்படுத்தாமல், துக்கப்படுத்தத் தூண்டாமல், துக்கப்படுத்துபவரை ஆதரிக்காமல் இருக்க எனக்கு பரம சக்தி வழங்குங்கள்.

யாதொரு ஜீவராசியின் 'நான்' என்ற தன்னுணர்வை சிறிதளவு கூட துக்கப்படுத்தாதவாறு, வெவ்வேறு கருத்துக்கள் கொண்ட அனைவராலும் ஏற்றுக்கொள்ளும் படியாக, எனது பேச்சு, செயல் மற்றும் எண்ணம் செயல்பட, எனக்கு பரம சக்தி வழங்குங்கள்.

2. அன்பார்ந்த தாதா பகவானே (நம்முள் இருக்கும் சுத்தாத்மா), யாதொரு மதக் கோட்பாட்டையும், சிறிதளவு கூட துக்கப்படுத்தாமல், துக்கப்படுத்தத் தூண்டாமல், துக்கப்படுத்துபவரை ஆதரிக்காமல் இருக்க எனக்கு பரம சக்தி வழங்குங்கள்.

யாதொரு மதக் கோட்பாட்டையும், சிறிதளவு கூட துக்கப்படுத்தாதவாறு, வெவ்வேறு கருத்துக்கள் கொண்ட அனைவராலும் ஏற்றுக்கொள்ளும் படியாக, எனது பேச்சு, செயல் மற்றும் எண்ணம் செயல்பட, எனக்கு பரம சக்தி வழங்குங்கள்.

3. அன்பார்ந்த தாதா பகவானே (நம்முள் இருக்கும் சுத்தாத்மா), நம்முடன் வாழும் ஆன்மீக சொற்பொழிவாளர், சந்நியாசி, சந்நியாசினி, ஆன்மீக குரு, ஆகியோரை உண்மைக்குப்

புறம்பான விமர்சனம், எதிர்ப்பு, அவமதிப்பு செய்யாமல் இருக்க, எனக்கு பரம சக்தி வழங்குங்கள்.

4. அன்பார்ந்த தாதா பகவானே (நம்முள் இருக்கும் சுத்தாத்மா), யாதொரு ஜீவராசியையும், ஒருபோதும் சிறிதளவு கூட வெறுக்க, ஏளனமாகப் புறக்கணிக்கச் செய்யாமல், செய்யத் தூண்டாமல், செய்பவரை ஆதரிக்காமல் இருக்க, எனக்கு பரம சக்தி வழங்குங்கள்.

5. அன்பார்ந்த தாதா பகவானே (நம்முள் இருக்கும் சுத்தாத்மா), யாதொரு ஜீவராசியிடமும், கடுமையாக மற்றும் புண்படுத்தும் வகையில் பேசாமல், பேசத் தூண்டாமல், பேசுபவரை ஆதரிக்காமல் இருக்க எனக்கு பரம சக்தி வழங்குங்கள்.


எவரேனும் கடுமையாக, புண்படுத்தும் வகையில் பேசினாலும், நான் அவர்களிடம் மென்மையாகவும், கனிவாகவும் பேச, எனக்கு சக்தி வழங்குங்கள்.

8. அன்பார்ந்த தாதா பகவானே (நம்முள் இருக்கும் சுத்தாத்மா), யாதொரு ஜீவராசியையும், கண் எதிரே இருப்பவை மற்றும் இல்லாதவை, உயிருடன் இருப்பவை மற்றும் மரணம் அடைந்தவை, என எவரைப் பற்றியும் சிறிதளவு கூட உண்மைக்குப் புறம்பான விமர்சனம், எதிர்ப்பு, அவமதிப்புச் செய்யாமல், செய்யத் தூண்டாமல், செய்பவரை ஆதரிக்காமல் இருக்க, எனக்கு பரம சக்தி வழங்குங்கள்.

9. அன்பார்ந்த தாதா பகவானே (நம்முள் இருக்கும் சுத்தாத்மா), உலகம், நலம் பெற்று மோட்சம் அடைவதற்கு, ஒரு கருவியாக செயல்பட எனக்கு சக்தி வழங்குங்கள், சக்தி வழங்குங்கள், சக்தி வழங்குங்கள்.

**ஜெய் சச்சிதானந்தம்**

# <u>தாதா பகவான் பௌண்டேஷன் தமிழ் யூடியூப் சேனல்</u>




- ❖ இது, அதாலஜ் தாதா பகவான் பவுண்டேஷனின் அதிகாரப்பூர்வமான தமிழ் யூடியூப் சேனல் ஆகும்.
- ❖ கீழே உள்ள இணைப்பில் இருந்து தமிழ் மொழியில் சத்சங்க வீடியோக்களை பார்க்கவும்.

**'Dada Bhagwan Foundation Tamil' Channel:**
[https://dbf.adalaj.org/yttamil](https://dbf.adalaj.org/yttamil)

*Open Link OR*
*Scan QR*

---

*Dada Bhagwan Foundation Youtube video channels are available in other regional languages: Gujarati, Hindi, Marathi, Bengali, Tamil, Telugu, Kannada, Malayalam, Spanish, Portuguese, etc.*

# Persons to Contact

## Dada Bhagwan Foundation

**Adalaj** : **Trimandir**, Simandhar City, Ahmedabad-Kalol Highway
P/O: Adalaj, Dist.- Gandhinagar - 382421, Gujarat, India.
Tel : +91-9328661166/9328661177
E-mail : info@dadabhagwan.org

**Mumbai** : **Trimandir**, Rushivan, Kajupada, Borivali (E)
Tel : +91-9323528901

| | | | |
|---|---|---|---|
| **Kolkata:** | 9830093230 | **Delhi:** | 9810098564 |
| **Jaipur:** | 9351408285 | **Chennai:** | 7200740000 |
| **Bhopal:** | 9425024405 | **Patna:** | 7352723132 |
| **Indore:** | 9039936173 | **Amravati:** | 9422915064 |
| **Raipur:** | 9329644433 | **Bangalore:** | 9590979099 |
| **Chandigarh:** | 9780732237 | **Hyderabad:** | 9989877786 |
| **Kanpur:** | 9452525981 | **Pune:** | 9422660497 |
| **Bhubaneswar:** | 8763073111 | **Jalandhar**: | 9814063043 |
| **Varanasi:** | 9795228541 | **Sangli:** | 9423870798 |

| | |
|---|---|
| **USA: Dada Bhagwan Vignan Institute**<br>Tel: + 1-877-505-DADA(3232)<br>Email: info@us.dadabhagwan.org | **U.K: Dada Darshan (UK)**<br>Tel: +44 330-111-DADA(3232)<br>Email: info@uk.dadabhagwan.org |
| **Germany:** +49 700 32327474<br>**UAE:** +97 1557316937<br>**Kenya:** +25 4722722063<br>**Dubai:** +971 501364530 | **Australia:** +61 421127947<br>**Singapore:** +65 81129229<br>**New Zealand:** +64 210376434 |

Website : www.dadabhagwan.org



## சேவை செய்வதன் பலன்கள்..

உலகத்திற்காக பணியாற்றவும்; உங்களுடைய வேலைகள் நிச்சயமாக நிறைவேறிவிடும். நீங்கள் உலகத்திற்காக பணியாற்றும்போது, உங்களுடைய பணிகள் தொடர்ந்து தானாகவே நடைபெறும். அப்போதுதான், நீங்கள் அதன் அற்புதத்தை உணர்வீர்கள்!

ஒரு மனிதன் மற்றவர்களுக்கு மகிழ்ச்சி அளிக்க தொடங்கும் தருணத்திலிருந்து தான், தர்மம் தொடங்குகிறது. ஒருவர் தன்னுடைய மகிழ்ச்சியை பற்றி கவலைப்படாமல்; மாறாக அவர், “மற்றவர்களின் சிரமங்களை எவ்வாறு நீக்குவது”, என்ற ஆழ்ந்த சிந்தனையில் தொடர்ந்து இருக்கும் தருணத்திலிருந்து தான் காருண்யம் (நிபந்தனையற்ற, நிலையான கருணை குணம்) தொடங்குகிறது. குழந்தை பருவத்திலிருந்தே, மற்றவர்களின் சிரமங்களை நீக்குவதில் நான் எப்போதும் அக்கறை கொண்டிருந்தேன். தன்னைப் பற்றிய எண்ணமே இல்லாமல் இருப்பதை தான் காருண்யம் என்று குறிப்பிடப்படுகிறது. உண்மையில் இதன் மூலமாக தான், ஆத்ம ஞானம் (ஞான்) வெளிப்படுகிறது.

-தாதாஸ்ரீ

मूल दीपक से प्रकटे दीपमाला

dadabhagwan.org

9 789391 375928

Printed in India

Price ₹ 45